முரசொலி

வார இதழ் — மு. கருணாநிதி

முரசு 3 | 17—8—56 வெள்ளி | ஒலி 19

பூகம்பம் அது! பூபாளம் பாடாதீர்!

“கோட்டையில் வாழவும்—கொடி கட்டி ஆளவும் இந்த நாட்டில் காங்கிரஸ் இயக்கம் மட்டுமே உரிமை பெற்றிருக்கிறது!”

“இரண்டு நூற்றாண்டுகளாக இந்த பூமியை; சந்தைமேடாக்கி வைத்திருந்த வெள்ளையரை விரட்டிவிட்ட எங்களுக்குத்தான், பாரதமாதா இந்த மண்டலத்தை ‘தானமாகத்’ தந்துவிட்டாள்”

“ஏன் என்று கேட்கவோ—எம் கொற்றத்தில் குறை காணவோ, வேறு எவருக்கும் உரிமை கிடையாது”

“நாங்கள் வகுத்துவிட்ட சட்டம், நாங்கள் எடுக்கின்ற முடிவுகள்—அதுதான் இந்த ‘அகில’ இந்தியாவின் ‘தலைவிதி’யை நிர்ணயிக்கின்ற இறுதியான தீர்ப்புகள், இதற்கு எதிர்ப்பு கிளம்பினால், துப்பாக்கி பேசும்; கண்ணீர் புகை சூழும்; கைப்பிரம்பு சுழலும்; தோட்டாக்கள் இதயத்தைப் பிளக்கும்; பிணமேடுகள் உயரும்; காராக்கிரகத்தின் கதவுகள் திறக்கப்படும்; இதுதான் நாங்கள் அறிந்த ஜனநாயகம்”

காங்கிரஸ் கர்ஜனையாளர்களின் பேச்சோ இது; என்ற சந்தேகம் எழலாம்; காங்கிரஸ் தோழர்கள் ‘காலம்’ உணராதவர்களா என்ன—அதிலும் தேர்தல் நேரமாயிற்றே இது! இப்படியெல்லாமா பேசுவார்கள்! ஆனால் ஆளவந்தார்களின் செயலும், அவர்களை ஆட்டுவிக்கும் மத்திய அரசினரின் நடவடிக்கைகளும் மேலே கண்ட ஜனநாயகத்தைதான் செயல் படுத்தி வருகின்றது.

‘பம்பாய்’ கூடவேண்டாம், ‘ஆமதாபாத்’ நிகழ்ச்சிகளை; படித்தவனின் பக்கத்திலே நின்று கேட்டவன் கூட; ‘இது என்ன நாசிச ஆட்சி’ என்று கூறுகின்ற அளவிற்கு ‘ஜனநாயகத்திற்கு’ மரியாதை காட்டுகின்றனர் நாடாளும் நாயகர்கள்.

இந்நிலையில், சீழ் வடியும் புண்ணுக்கு செந்தூரம் பூசிவிட்டு—சிலைமேனி பார், கலை வண்ணம் பார், என்று புகழ் தேடும் படலத்தில் ‘ஊர் உலா’ நடத்திக் கொண்டிருக்கிறார் நேரு பண்டிதர்!

தட்டிக் கேட்பவருக்கோ—“நான் நாட்டின் முதல்வன் மட்டுமல்ல—அதனினும் மேலானவன் அறியீரோ!” என்ற திமிர் வாதம் பதிலாகக் கிடைக்கிறது.

‘இங்கிருக்கும் தேசிய ஏடுகள் அனைத்துமே நேருவின் புகழ் பாடுகின்றன; பக்கத்திற்குப் பக்கம் அவர் படம்தான்’ இப்படி ஆச்சாரியாரே குமுறுகின்ற அளவிற்கு ‘ஏமாந்த நாடாகி’விட்டது தென்னகம்!

* * *

இந்த நிலையை தெளிவாக உணர்ந்து கொண்டுதான்; வடக்கிலிருந்து தென்னகம் வந்து ‘ராஜோபசாரத்துடன்’ அடிமைகளைப் பார்வையிட்டுச் செல்லும் எஜமானர்களைப் போல, அடிக்கொரு போலீஸ் புலியை நிறுத்திக்கொண்டு; உலா நடத்தி செல்கின்றனர்.

வந்து திரும்புவதோடு; திருவாய் மலர்வதாகக் கருதிக்கொண்டு; தேய்ந்துபோன வாதங்களையும்; .செல்லுபடியாகாத அரசியல் கருத்துக்களையும் உமிழ்ந்து—பிறிட்டுக் கிளம்பும் உரிமைக்கிளர்ச்சியை, விடுதலைவேட்கையை, செல்லரித்தக் காகிதத்துண்டால் மூடிவிட நினைக்கின்ற விந்தையை நினைக்கும் போதுதான்—வேதனையாக இருக்கிறது!

ரோமாபுரியின் சக்தி வாய்ந்த இரண்டு தலைவர்களாக இருந்த சீசரும். பாம்பேயும்—மக்களிடையே தங்களுக்கிருக்கிற நம்பிக்கையும் — செல்வாக்கும் குறைகிறது என்பதை சூசகமாக அறிந்து கொண்டபோது; பட்டி தொட்டிகளிளெல்லாம் பவனி வந்தார்களாம்; ஊருக்கு ஊர்; மூலைக்கு மூலை உலா நடத்தினார்களாம்; மக்களின் நேரடித் தொடர்பு தங்களுக்கிருப்பதாகக் காட்டிக்கொள்வதற்காக—இத்தகைய அரசியல் ‘நாடகங்களை’ நடித்தார்களாம்!

அந்த சரித ஏடுகளைப் புரட்டிய நேரு பண்டிதரும் இந்த ‘அரசியல் நாடகத்தை’ சில ஆண்டுகளாக பின்பற்ற—அதைத் தொடர்ந்து வடக்கு தேவர்கள்–தென்னகத்தில் தங்களுக்கெதிராக உருவாகிவரும் சக்தியை கண்டு அஞ்சி; அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அடிக்கடி ‘சென்னை விஜயம்’—நடத்தி வரும் செப்படி வித்தையை பொது மக்கள் எல்லோருமே புரிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

அந்த வரிசையிலே—சென்ற கிழமை சென்னை வந்த, காங்கிரஸ் தலைவர் தேபர்ஜி இடம் பெற்றுள்ளார்.

சீசர் வரிசையிலே—இந்த ‘பஞ்சசீலர்கள்’ இடம் பெற முடியாது என்றாலும்–இழந்து போன செல்வாக்கை மீண்டும் பெற; பாவம், எத்தகைய முறைகளையெல்லாம் கையாளுகிறார்கள் என்பதை நினைக்கும் போது அவர்கள்பால்—நமக்கெல்லாம் இரக்க உணர்ச்சி ஏற்படாமல் இல்லை.

“தனி நாடு கேட்கும் திராவிட இயக்கத்தின் கோரிக்கை அரசியல் வித்தை!”

“இன்றைய நிலையில் இந்தியாவின் ஒரு பகுதி மற்ற பகுதிகளின் உதவியின்றி தனித்து வாழ முடியாது, உதாரணமாக தென் இந்தியாவிற்கு இரும்பும் நிலக்கரியும், பீகார் முதலிய மாகாணங்களில் இருந்துதான் வரமுடியும்”

“இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தால் அனேக முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன”

“இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் பலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும்; ஒரு சங்கிலியில் ஒரு வளையம் மட்டும் பலமில்லாமல் இருந்தால் அது சங்கிலிக்குப் பலவீனமே,”

“ஆகவே தியாக உணர்ச்சியோடு இந்திய ஒற்றுமைக்குப் பாடுபட வேண்டும்,”

—தேபர்தான், இவ்வளவையும் பேசி யிருக்கிறார்!

*

‘ஒரு கை பார்த்து விடுவேன்; உஷார்’ என்று ‘நாகரிகத்தோடு பேசும் காங்கிரஸ் கர்ஜனையாளர்கள், எதை ஓயாமல் முழங்கிக் கொண்டிருக்கிறார்களோ அதையே — சற்று வேகம் குறைத்து — வேண்டுகோள் பாணியிலே உரை நிகழ்த்தியிருக்கிறார் தேபர்!

மாபெரும் காங்கிரஸ் இயக்கத்தின் மகத்தான தலைவர்! நேரு பண்டிதரின் நிழல்! அவருக்கு ஏற்பட்டிருப்பதோ சராசரி அரசியல் வாதிகளும் புரிந்து கொள்ளும் சாதாராண சந்தேகங்கள்!

தேபரின் அற்புத அரசியல் விளக்கங்கள் எல்லாவற்றையும்விட; பிரிவினை கூடாது என்பதற்கு அவர் சிந்தியுள்ள விசித்திர காரணம் ஒன்றுதான் அறிவுலகை சிரிப்பிலாழ்த்தியிருக்கிறது.

‘தென் இந்தியாவிற்கு வேண்டிய இரும்பும் நிலக்கரியும் பீகாரில் இருந்துதானே வர வேண்டும்’—கேட்கிறார் தேபர்! அரசியலில் அறுபது ஆண்டுகளாக அனுபவம் பெற்ற ஒரு இயக்கத்தின் தலைவர்!

‘தனி நாடு’ என்பதன் அடிப்படைத் தத்துவத்தையே. உணராத நிலையில் உரை சிந்தியிருக்கிறார். பெரியவர்!

ஒரு நாட்டிற்குத் தேவையான—மூலப் பொருள்களுக்காகவே ஒரு பகுதி மற்றொரு பகுதிக்கு அடிமைப்பட்டிருக்க வேண்டும்; இணைந்திருக்க வேண்டும் என்பது; உலக வரலாறு ஒப்புக் கொள்ளாத தேபரின் தனி முடிவு; என்பதைத் தவிர இந்த விசித்திர விளக்கத்திற்கு — வேறென்ன பதில் இருக்க முடியும்?

பால், டென்மார்க்கில் இருந்து வருகிறதே என்பதற்காக—டென்மார்க்கிடம் தங்கள் உரிமைகளை அடகு வைக்க எந்த அண்டை நாடும் தயாராக இல்லை!

கைக்கடியாரம் தேவையாயிற்றே என்பதற்காக சுவிட்சர்லாந்தின் காலடியிலே தங்கள் சுதந்திரத்தைக் காணிக்கையாக்க பக்கத்து நாடுகள் விரும்பியது கிடையாது!

போர்த்தளவாடங்கள் ஒரு நாட்டிற்கு அவசியம் என்பதற்காக, அமெரிக்காவிடமோ, ரஷ்யாவிடமோ; அடிமை சாசனத்தை நீட்ட பல சுதந்திர விரும்பிகள் முன் வந்ததில்லை!

கோதுமை தேவையாயிற்றே என்ற காரணத்திற்காக அர்ஜென்டினாவிடம் தங்கள் உரிமைகளை அடகு வைக்க எந்த தன்மானமுள்ள மக்களும் எண்ணமாட்டார்கள்!

ஆனால் தேபர் சொல்லுகிறார் ‘இரும்பும் — நிலக்கரியும் தேவையாயிற்றே உங்களுக்கு; அது நாட்டின் ஒரு பகுதியான பீகாரில் இருந்துதானே கிடைக்க வேண்டும்; நீங்கள் பிரிந்து சென்றால்—அதை எப்படிப் பெற முடியும்?’ காங்கிரஸ் தலைவர்! அகில உலக சிக்கல்களை அவிழ்த்துவிட மூக்கை நீட்டிக் கொண்டு பறக்கும் நேருவின் நேசர்! என்றாலும் சொல்லுகிறார், பொருளாதார உதவிகளுக்காக ஒரு பகுதி—மற்றொரு பகுதியோடு இணைய வேண்டுமென்று!

கட்டை வண்டியின் அச்சு தேய்ந்து கொண்டிருப்பது போல—தேய்ந்து வருகிறதே தென்னகம்!

இந்நிலையில் போடுகிற ஐந்தாண்டுத் திட்டங்கள், மேலும் மேலும் தென்னகத்தைப் புறக்கணித்துத்தானே வருகிறது.

‘இந்திய உப கண்டம் ஒரு சங்கிலி என்றால்—எல்லா வளையமும் சமமாக இருக்க வேண்டும்’ இதுவும் தேபர் வாசகம் தான்!

டெல்லி மத்திய அரசின் பிடியில் இருக்கும் அத்தனை வளையங்களும்; சமமாகத்தான் காணப்படுகிறதா?

பொருளாதாரத் துறையில்—தொழில் வளர்ச்சியில்—சென்னை ‘வளையம்’ துருப்பிடித்து—நாளுக்கு நாள்—

* தொடர்ச்சி 10–ம்பக்கம்

சென்னை 17-8-56 வெள்ளி

தம்மம்பட்டி!

கண்ணை மூடிக் கொண்டு துப்பாக்கி ரவைகளைத் தட்டிவிடுவது; காட்டுமிராண்டித்தனமாக தடியடிப் பிரயோகம் செய்வது; கண்ணீர்ப் புகையைப் பிரயோகிப்பது—போன்ற ஜனநாயக நாடுகள் அறிந்திராத செய்கை, இந்தியக் குடியரசு என அழைக்கப்படும் இந்தப் பகுதியிலே மிகுந்துவிட்டது.

கலைந்து செல்லுங்கள் - என்று சொன்னவுடனேயே வீட்டிற்குத் திரும்பக்கூடிய மக்கள் மீது தடியடிப் பிரயோகம் நடத்தத் தயங்குவதில்லை, இந்த அரசு!

அனனத்தின் தூவியும், அனிச்சத்தின் மலரிதழும் பட்ட மாத்திரத்திலேயே நெருஞ்சிமுள் தைத்துவிட்டதாகக் கருதி, கோவெனக் கதறும் பட்டுமேனி கொண்ட 'பாரதத்'தின் பாவையர்மீதுகூட துப்பாக்கி வேட்டுகள் பலமுறை, பல இடங்களில் பொழியப்பட்டிருக்கின்றன

பள்ளிச் சிறுவர்கள்: பாலகர்கள்; வயோதிகர்கள்—இவர்களுக்குக் கூட இரக்கம் காட்டுவதில்லை, இந்த அரசாங்கம்.

சமீபத்தில் ஹோர்சியாபூரிலே நடந்த கொலை பாதகச் செயலையும், அதைத் தொடர்ந்து சீமன் நாராயண் தலைமையிலே நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு, போலிசாரின் மிருகச் செயலை உலகுக்கு அறிவித்து உறுதி செய்ததையும், பத்திரிகைகளில் படித்தோம்.

அதைப் போலவே தென்னகத்திலும் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

சேலம் ஆத்தூரை அடுத்த தம்மம்பட்டி என்ற சிற்றூரிலே சென்ற பிப்ரவரி 20 ஹாத்தாலின்போது போலீசார் நியாயமற்ற முறையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தது நினைவிருக்கலாம்.

யாரைக் குறிவைத்து தோட்டாக்கள் பாய்ந்திருக்கின்றன? கம்பும், கத்தியும், கவணும், கல்லும் வைத்திருந்த பயங்கரவாதிகள் மீதா? அல்ல; அல்ல.

அமைதியான ஊர்; ஆத்திர உணர்ச்சியோ—கலவர நோக்கமோ இல்லாத மக்கள்; ஊர்வலம் செல்வதற்கு முன்னமேயே 'லைசென்ஸ்' பெற்ற கடமை வீரர்கள்,

—அவர்கள் அடங்கிய பொது மக்கள் கூட்டத்தில் எந்தவித முகாந்திரமுமின்றி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாக உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

ஏதாவது கமிட்டியொன்று அமைத்து விசாரணை நடத்தப்பட்டதா?—என்று கேட்டுவிடாதீர்கள். அந்த அளவுக்கு காமராசர் இன்னும் அரசியல் நாகரிகம் பெற்றாரில்லை! அவர் சார்ந்திருக்கும் தேசியத் தலைமைப்பீடமும் இன்னும் மக்களாட்சித் தத்துவத்தின் பால பாடத்தைக்கூட புரட்டிப் பார்க்கவில்லை!

கமிட்டியின் அறிக்கையல்ல; அந்த நாள் குற்றம் சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்ட இருபத்தைந்து தோழர்களை விசாரித்து தீர்ப்பு கூறும்போது இந்தக் காங்கரஸ் ஆட்சி வெட்கித் தலை குனியவேண்டிய அளவுக்கு உண்மையை இருட்டிலிருந்து வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார், வழக்கை விசாரணை செய்த சப்-மேஜிஸ்ரேட் அவர்கள்!

20-2-56 அன்று கூட்டம் நடத்துவதற்கும், ஊர்வலம் செல்வதற்குமான அனுமதியை தோழர் சத்யநாராயணா என்பவர் முன்பே தக்க அதிகாரிகளிடம் வாங்கியிருக்கிறார். போலிஸ் தரப்பினரின் பதிமூன்றாவது சாட்சியே இதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

ஆனால் அனுமதி வாங்கி வைத்திருந்த தோழர் சத்திய நாராயணாவை, அந்த அனுமதிச் சீட்டுடன் சம்பவம் நடந்த நாள் காலை ஒன்பது மணிக்கே கைது செய்து விட்டனர், போலிசார்!

அனுமதி பெறப்பட்டுவிட்டது; ஆனால் அனுமதிச் சீட்டோ தோழர் சத்யநாராயணாவுடன் சிறைச்சாலையில் இருந்தது!

'லைசென்ஸ்' யாரிடம் இருந்தால் என்ன? எப்படியோ ஊர்வலம் நடத்துவதற்குத்தான் அரசாங்கம் அனுமதித்துவிட்டதே! என்ற நினைப்பில் இதர தோழர்கள் குறிப்பிட்ட நேரத்தில், ஊர்வலம் எடுத்துச் செல்ல முயன்றிருக்கின்றனர்.

பிறகுதான் அதைத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகமும், பல கைதுகளும் செய்யப்பட்டிருக்கின்றன!

வழக்கை விசாரணை செய்த நீதிபதி அப்போது கூறியிருக்கிறார்:

❊

"விதிக்கப்பட்டிருந்தத் தடையை—வேண்டுமென்றே மக்கள் மீறவில்லை; தங்களுடைய தலைவர் சத்தியநாராயணாவிற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்ற நன்னம்பிக்கையின்மீதே அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள்.

"பலாத்கார உணர்ச்சியுடன் மக்கள் நடந்து கொள்ளவில்லை. போலீஸ்மீது கல் எறியவில்லை."

❊

அடுத்து, காரணமின்றி அன்று நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தையும் கண்டித்திருக்கிறார், மதிப்பிற்குரிய நீதிபதி!

❊

"போலீஸ் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் இருந்தாலே கூட்டம் கலைந்துபோயிருக்கும்.. அன்று தம்மம்பட்டி அமைதியாகவே இருந்தது என ஒப்புக்கொள்ளப்பட்டு இருக்கிறது. பஸ் போக்குவரத்து நடைபெற்றது; பள்ளிகள் பணியாற்றின; மக்களும் கலக உணர்ச்சியின்றி அமைதியாக இருந்து வந்தனர்; எந்தவித முழக்கத்தையும் அவர்கள் முழங்கவில்லை. அந்த நேரத்தில், 'ஊர்வலம் செல்ல அனுமதி கிடைத்திருக்கிறது என்ற தவறான நன்னம்பிக்கையின்மீது அவர்கள் செயல்பட்டு இருக்கிறார்கள். இந்த உண்மைகளை எல்லாம் கருத்துள்கொண்டு தடை உத்தரவை மீறவேண்டும் என்ற கருத்தில், வேண்டுமென்றே ஊர்வலத்தினர் தடையை மீறவில்லை என நான் முடிவிற்கு வருகிறேன், அவர்கள் ஒன்றுகூடி இருந்ததும் சட்ட விரோதமானக் கூட்டம் எனவும் கூறுவதற்கில்லை."

❊

காமராசர் குறித்து வைத்துக் கொள்ளட்டும்:

போலிஸ் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலிருந்தாலே கூட்டம் கலைந்திருக்கும்!

ஊர்வலத்தினர் வேண்டுமென்றே தடையை மீறவில்லை!

அவர்கள் ஒன்றுகூடி இருந்ததும் சட்டவிரோதமானதல்ல!

—இத்தகைய வாக்கியங்களைச் சூட்டுக் கோலாகக் கொண்டு காமராசரின் முகத்திலே சூடு போட்டுவிட்டது, எல்லோருக்கும் பொதுவான நீதி!

தமிழினத்தின் ஒருமித்த போராட்டத்தை—தி. மு. கழகத்தின் துணையோடு இந்த நாட்டிலே திரண்ட மகத்தானதோர் மக்களெழுச்சியை, எப்படியாவது மாசு படுத்திவிட வேண்டுமென்ற நினைப்பில் தான், நிலையையும் மறந்து தலைகீழாய் நடந்து கொண்டது, காமராசர் அரசு!

அந்த முறைகெட்ட செயல்களின் ஒரு பகுதிதான், தம்மம்பட்டி துப்பாக்கிப் பிரயோகம்!

பிப்ரவரி 20 அன்று ஹர்த்தால் நடத்தியவர்கள் பலாத்கார வாதிகள்; சட்டத்தை வேண்டுமென்றே மீற வேண்டுமென்ற மனப்பாங்கு கொண்டவர்கள்—என்பதை நிலைநாட்டிவிட படாதபாடு பட்டார், காமராசர்!

அந்தோ, பரிதாபம்! அவர் தோற்றுவிட்டார்! ஆமாம்; பொய்மை தோற்றுவிட்டது—உண்மை உதய சூரியன் போல எழுந்துவிட்டது!

குடியாட்சிக் கொள்கையை கோமாளிக் கூத்தாக்கிக் காட்டுகின்ற இந்த நல்ல தீர்ப்பு, பிரச்னையை இத்துடன் முடித்துவிடக் கூடியதாய் அமையவில்லை!

மாணவன் திருந்த வேண்டுமே—என்பதற்காக நையப் புடைக்கிறார், ஆசிரியர்! ஆனால் பலாத்காரத்தை அப்படி உபயோகிக்கும் ஆசிரியர்கள்கூட நீதிக்கு முன்னால் தண்டனை பெறுவதைப் பார்க்கிறோம்.

பெற்றோர்கள் தாங்கள் பெற்ற குழந்தைகளை காயம்படுகிற அளவுக்கு இம்சித்தால்கூட சட்டம் அவர்களைச் சும்மா விட்டுவிடுவதில்லை.

ஆனால் தம்மம்பட்டியிலோ பொது மக்களை ஆட்டு மந்தைகளை விடக் கேவலமாக நினைத்து துப்பாக்கி வேட்டையாடியிருக்கிறார்கள், சம்பந்தப்பட்ட போலிசார்!

உண்மை ஜனநாயகம் இங்கு இருப்பதாகக் கூக்குரல் எழுப்பும் தேசிய வீரர்கள், இந்த விபரீதச் செயலுக்குக் காரணமாயிருந்தவர்களை விசாரிக்க முன் வருவார்களா?

அந்தக் காரணமற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் மூலம் காயம் பெற்று மருத்துவ மனையிலிருந்து இன்னும் வீடு திரும்ப முடியாத நிலையிலேயிருக்கும் தோழர் இராமலிங்கத்திற்கும், தழும்புகளைத் தடவியபடி உலவும் ஏனைய தோழர்களுக்கும் தக்க நஷ்டஈடு உதவுவார்களா?

—தம்மம்பட்டிப் பொது மக்கள் சார்பாக காமராசரிடம் இந்தக் கேள்விகளைக் கேட்கிறோம். விரைவில் அவர் பதில் சொல்லட்டும், செயல் மூலம்!

ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?

மூன்று புறமும் கடல் கோண்டு இயற்கை அரண்கள் எதுவுமில்லாது குறையுடையது நீங்கள கேட்கும் திராவிடநாடு. இதனால் அது வெளியாரின் தாக்குதலுக்கு சுலபத்தில் இரையாகி விட முடியும் இத்தகைய பலக் குறைவான நாட்டையா நீங்கள் கேட்கிறீர்கள்?

இந்தக் கேள்வியே வேடிக்கை நிறைந்ததாய் இருக்கிறது.

கிழக்கிலும், மேற்கிலும், தெற்கு முனையிலும் நீலத்திரை கடல் இருப்பதனால் எங்கள் திராவிடத்துக்குத் தனி எழில் கிடைக்கிறது; தரித்திரம் ஓடுகிறது என இறுமாந்து கிடப்பவர்கள் நாங்கள்!

ஆழும் கடல்கள்; அது தரும் கட்டாணி முத்துகள்—இது ஒரு வருவாய் திராவிடத்துக்கு!

மூன்று பக்கமும் முழங்கும் கடல்கள்—அதன்மூலம் வெளி உலகத்துத் தொடர்புகள், தென்னகத்துக்கு!

இது பலவீனமல்ல தோழரே; திராவிடம் போன்ற சில நாடுகளுக்கே அமைந்திருக்கிற தனிச் சிறப்பு!

மனிதகுல வரலாற்றிலே முதல் கப்பல் மிதக்கவிடப் பட்டது இந்துப் பெருங்கடலில்! அதை மிதக்க விட்டவன் திராவிடன்!

—எப்படி முடிந்தது இந்தச் சாதனை? வடக்கே இமயமலை இருப்பதைப் போல். மூன்று முனையிலும் மலையிருந்தால் திராவிடன் கடலைக் கண்டு கவலை கொள்ளும் ஜாதியாக வளர்ந்திருப்பான்!

அப்போது 'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று பழமொழி கூறியிருக்காது. கடலைக் கடப்பது பாபம் என்று சமுதாயம் சட்டம் பிறப்பித்திருக்கும்!

திராவிடத்திற்கு வளத்தையும், வற்றாத செல்வத்தையும், வரையற்ற புகழையும் தந்த மூன்று கடற் பரப்பையா நீர் கேலி செய்கிறீர்? வேடிக்கை; வேடிக்கை!

ஒரே ஒரு குறையுண்டு வங்கக் கடலில்! புயல் எழுப்புகின்ற உலகத்தின் நான்கு கடல்களுள் அதுவுமொன்று என்பதைத் தவிர நமது நீர் எல்லையில் யாரும் தவறு காணமுடியாது.

ஏனைய கடல்களைப்போல நமது கடல்கள் பனியால் உறைந்துவிடும் தன்மை கொண்டவையல்ல! மாலுமிகளின் விழிகளை மூடிவிடும் மூடுபனி, இங்கே கிடையாது! திடீர் திடீரென்று மாறுகின்ற வெப்பதட்ப நிலைகளும் இல்லை! உஷ்ண நீரோட்டங்களோ, அன்றி குளிர் நீரோட்டங்களோ போக்கு வரத்தைப் பாதிப்பது கிடையாது! இவ்வளவு நல்ல வாய்ப்புகள் உண்டு திராவிடத்துக்கு!

கடல் அவனைக் கூவி அழைத்ததால் கிரேக்கத்தோடும், யவனத்தோடும் தொடர்பு கொண்டிருந்தனர், நமது மூதாதையர்! பெரிப்ளஸ் என்பான்புகழ் பெற்ற தமிழகத்தின் துறைமுகங்களைப் பற்றி சிந்தை குளிர்விக்கும் விதத்திலே சொல்லோவியம் தீட்டி யிருக்கிறான். டாலமி மலாய் தீவுகளுக்கும் திராவிடத்துக்கும் உள்ள தொடர்புகளைக் கூறுகிறான். சீன யாத்ரிகனுகை இட்சிங் நாகப் பட்டணத்துத் துறைமுகத்திற்கும் மலேயாவிலுள்ள கேடா துறைமுகத்திற்கும் இருந்து வந்த கப்பல் போக்குவரத்தை விளக்குகிறான். பர்மாவிலே படையை மோதியிருக்கின்றனர்; ஈழத்தை வென்றிருக்கின்றனர், நமது தந்தையர்!

இந்த வையகம் விரிந்து கிடப்பது; அதிலே பல தரப்பட்ட கலாச்சாரமுடைய மக்கள் வாழ்கின்றனர்—என்று திராவிடனுக்கு எடுத்துக் காட்டியது கடல்தான்!

இந்தக் கேள்வி எழுப்பியவர் மனதிலே நினைத்துக் கொண்டிருக்கிறார், இந்தியாவின் வட பகுதியிலே இமயமலை இருபதாயிரம் அடிகள் உயரத்திற்கு வளர்ந்து, அரண்போல இருக்கிறதே; அதுபோன்ற அரண்கள் இல்லா திராவிடம் எப்படி பகை நாடுகளின் படையெடுப்பு பயமின்றி வாழ முடியுமென்று!

> "திராவிடஸ்தான் வேண்டுமா? வேண்டாமா?" என்ற தலைப்பில் போட்டி நடத்தியது சென்னை பத்திரிகை ஒன்று. அதில் "வேண்டாம்" என்பதற்காக வாதாடிய தோழர்களுக்குப் பதிலாக இந்தத் தொடர் கட்டுரை சென்ற இதழிலிருந்து வருகிறது.

உண்மைதான்; இந்திய உபகண்டத்தின் வடகோடியிலே இருக்கும் இமயம் பலமான பாதுகாப்புதான்!

ஆனால் அதனால் விளைந்த கேடுகள் எவ்வளவு தெரியுமா?

(1) முதலாவதாக, வடநாடு வாழ்வோர் இமயமலையோடு உலகம் முடிந்து விட்டதாகவே பல நாட்கள் கருதி வந்தனர். அப்படி ஏதாவது ஒரு நாடு இமயத்துக்கு அப்பாலிருந்தாலும் அதுபற்றிய கவலையில்லாமல், அந்த நாட்டோடு உறவு கொள்ளவேண்டுமென்ற அக்கரையில்லாமல் வாழ்ந்து வந்தனர்.

(2) அடுத்ததாக, இமயம் பெரிய பாதுகாப்பு என்ற நம்பிக்கையிருந்ததனால் அந்த எல்லையைக் காப்பதில் கவனம் செலுத்தாமலிருந்தனர். அதனால் திடீரென்று அன்னியப் படையெடுப்பு நிகழ்ந்தபோது அவர்கள் அதைத் தடுத்து நிறுத்த முடியாமல் தவித்தனர். இந்துகுஷ் மலைத் தொடரைத் தாண்டி,பஞ்சாபிலே அன்னியர் வந்த பிறகுதான் சொந்த நாட்டில் பகைப் பலம் புகுந்த செய்தி அவர்களுக்குத் தெரிய முடிந்தது.

(3) கடைசியாக, வடநாடு வாழ்வோர் இமயம் தடுத்தது காரணமாக, அகில உலகத்துடன் தொடர்பு கொள்ளத் தவறினர். உதாரணமாக, இந்தியாவுக்கு அப்பாலிருக்கும் சீனம் இந்த உபகண்டத்தைப் போலவே பழம் பெருமையும், கலாச்சாரமும் கொண்ட நாடு. பார்க்கப்போனால் இரு கலாச்சாரங்களும் சம காலத்தில் உயர்ந்து வளர்ந்தவை. ஆனால் பல நூறு ஆண்டுகள் வடநாடு அதனுடன் ஒரு தொடர்புமில்லாமலேயே வாழ்ந்திருக்கிறது.

தென் கோடியில் கொடி கட்டி வாழ்ந்த தமிழகத்தின் பெருமைபற்றி கிரேக்கமறியும்; யவனத்துக்கு அதன் கீர்த்தி தெரியும்! எகிப்து நாட்டு அந்தப்புரம், வரை தமிழகத்தின் பொருள்கள் வியாபார ஆக்ரமிப்பை நடத்தி யிருக்கின்றன.

அதைப் போலவே பாரசீகமும் சர்வதேசத் தொடர்பு கொண்டிருந்தது. சீனம் ஆசியா முழுமைக்கும் உறவு வைத்திருந்தது.

வட நாடோ இமயம் காரணமாக தொடர்பின்றி, அடுத்த நாட்டின் நட்பின்றி, அறியாமைச் சகதியிலே ஆழ்ந்து கிடந்தது!

உதாரணமாக, வடமொழிப் புலவன் காளிதாசன் 'ரகுவம்ச'த்தின் இலட்சிய சக்கரவர்த்திகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, அவர்களை 'அசமுத்ர சித்திசானம்' என்று குறிப்பிடுகிறான். அதாவது கடலின் கரை வரையில் உள்ள நிலப் பரப்பிற்கு அரசன் என்பது இதற்குப் பொருள்!

கடலைக் கட்டி யாளுவது; கடலிலே உள்ள தீவினைக் கொள்வது; கடலுக்கு அப்பாலிருக்கும் நிலப் பரப்பையும், அதில் வாழும் மாந்தரையும் அடிமை கொள்வது—இவை பற்றி வடநாட்டு மன்னர்கள் கனவிலும் நினைத்ததாகத் தெரியவில்லை.

ஆனால் தென்னகத்து மன்னர்களோ அப்படி அல்ல! ஆந்திர மன்னர்கள் தங்களை 'திரிசமுத்திராதிபதி' என்றே கூறிக் கொண்டார்கள். அதாவது மூன்று கடல்களுக்கும் அவர்கள் அதிபதிகளாம்!

அவ்வளவு ஏன்; கள்ளிக் கோட்டையில் சமீப காலத்தில்,

✲ தொடர்ச்சி 9-ம் பக்கம்

வேற்றுபாடுதான் என்ன?

மலாய் கம்யூனிஸ்ட் கட்சியில் ஒரு பெரும் புள்ளியும், பயங்கரவாதிகள் கோஷ்டியொன்றின் தலைவருமான பெருமாள் என்கிற தமிழரை உயிருடன் பிடித்துக் கொடுத்தால் 12,000 மலாய் டாலரும், கொன்றால் 10,000 டாலரும் வெகுமானம் தரப்படும்.

அவருடைய காதலியாகிய ருக்மணியைப் பிடித்துக் கொடுத்தால் 2000 டாலரும், கொன்றால் 1500 டாலரும் வெகுமானம் கொடுக்கப்படும்.

— மலாய் அரசாங்கம்.

நாகமலைத் தொடரின் பெரும் புள்ளியும், நாகர்களின் விடுதலைக் கிளர்ச்சிக்குத் தலைவரும், சுதந்தரம் இல்லையெனில் சாதலே மேலெனத் துணிந்து விட்ட தளகர்த்தரும், அஸ்ஸாம் போலீசார், இராணுவத்தினர்—ஆகியோரின் கண்களில் அகப்படாமல் தலை மறைவாய் இருந்து வருபவருமான பிசோவைக் கண்டுபிடித்துக் கொடுத்தால் ரூபாய் ஐயாயிரம் வெகுமானம் அளிக்கப்படும்.

— இந்திய அரசாங்கம்.

பல்லவன் காதல்!

ஏ. கே. வில்வம்

● கொலை நெஞ்சம் படைத்த ஒருவன், மலைத் தோளனுக்கு குறி வைத்தான். கலை சமைக்கும் புலவன் ஒருவன், சிலை மேனியாள் ஒருத்தியை. அந்தக் காதகனுக்கு அம்பாக்கித் தந்தான்! காஞ்சிமா நகரைக் கண்ணீர்க் கடலில் மூழ்க்கடித்த அந்த சோக சம்பவம் சரித ஏடுகளில் ஏனே-இருள் படிந்து காணப்படுகிறது!

தெள்ளாற்றுப் போர் தந்த வெற்றிக்களிப்பால், படை வீரர்கள் ஆரவாரம் எழுப்பி வான மண்டலத்தை ஒலி அலைகளால் நிரப்பிக் கொண்டிருந்தனர்.

மல்லை வேந்தன் வாழ்க!
மயிலைக் காவலன் வாழ்க!
பல்லவர் தோன்றல் வாழ்க!
பைந்தார் நந்தி வாழ்க!

வரகுண பாண்டியனின் மண்ணாசைக்கு—வாள் முனையிலே பாடம் கற்பித்து — தாயகத்தின் இழந்த ஒரு பகுதியை பெற்றுத்தந்த மன்னர் மன்னனை—பல்லவர் திலகத்தை—இப்படி வீர ரெல்லாம் வாழ்த்தினர்; வெற்றி தந்த போதையால், ஆடியும் பாடியும் தங்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர்.

❋

காஞ்சியை தலை நகராகக் கொண்ட, சோழமண்டலத்தையே, தன் குடை நிழலில் கொண்டு வந்து—அரசு கட்டில் ஏறினான் நந்தி வர்மன். தாயகத்தை சூழ்ந்திருந்த இருள் விலக்கியும்—சூழ நினைத்த பகை ஒடுக்கியும், சிதைந்துகிடந்த பல்லவராஜ்ஜியத்தின் சக்தியையெல்லாம் ஒன்று திரட்டி—குறைவுபடா நல்லாட்சியை நிலை நாட்டினான்.

சிற்பக் கலைக்கும்—சிந்தையை கலைமழையால் குளிப்பாட்டும் சித்திரக்கலைக்கும், தமிழகத்தில் உயிர்கொடுத்தவர்கள் பல்லவ மன்னர்கள் என்றால்—அதிலே நந்திவர்மனுக்கும் பெரும் பங்கு உண்டு.

கலை சமைக்கும் மனிதர்கள் என்றால் அவனுக்கு உயிர்!

சித்திரக்காரர்கள்; அவன் சிந்தையிலே அவர்களுக்கென ஓர் தனியிடம்!

சிற்பம் வடிப்போர்; மன்னனின் கைலாகுக்குப் பாத்திரமானவர்கள்; அரசியல் அந்தஸ்து பெற்றவர்கள்!

சுந்தரத் தமிழ் பாடும் புலவர்கள்; அவர்களைப் பிரிந்து மன்னன் தனியாக யிருந்தது கிடையாது: அவர்கள்தான் அவனுக்கு மதி மந்திரிகள்!

பூ மொய்க்கும் வண்டுபோல—கலைஞர்கள், நந்திவர்மனை எப்பொழுதும் சூழ்ந்து கொண்டிருப்பர்;

தலை நகரம்; தமிழ் மணக்கும் நீரோடையாக யிருந்தது;

பல்லவம் கலை வளர்க்கும் அறிவுத் தோட்டமாக யிருந்தது;

எறும்பு வரிசை போல—புலவர் வரிசை அந்தக் கலைக் கோமானிடம் பரிசில் பெற வருவர்;

அந்தக் கவிதை செய்யும் நெஞ்சங்களுக்கு அவன் ஓர் குளிர் வடிக்கும் நிலவாக விளங்கினான்.

❋

'கலைவளர்க்கிறானும் கலை! யார் வீட்டு சொத்து—இவன் வாரியிறைப்பதற்கு; பட்டியிலே அடைக்கப்பட்டிருக்கும் ஆடுகளைப்போல, நாட்டிலுள்ள அழகிகளையெல்லாம் அரண்மனையிலே அடைத்து வைத்திருக்கிறான்; ஆடலழகிகளாம்! ஆட்டக்காரிகளாம்! சே! அரண்மனையா இது! சோற்றுக் காக்காய்கள் வட்டமிடும் அன்னசத்திரமாகி விட்டது இந்த அரசாங்கம்!......தூமகேது...!'

"நான் என்ன சொல்வேன் முத்துவீரா! மன்னனுக்கு இவ்வளவு பித்தம் தலைக்கேறி விடும் என்று நான் நினைத்துக் கூட பார்க்கவில்லை...தமிழாம், தமிழ்ப் புலவர்களாம்; பரிசிலாம்; பல்லவராஜ்ஜியமே அழிந்து மண்மேடாகப் போகிறது'

'மண்மேடா—அதைக்கூட தானம் கேட்க வந்துவிடுவான் எவனாவது ஒரு புலவன்; தூமகேது! இனியும் இதை என்னால் சகித்துக்கொள்ள முடியாது!'

'முத்துவீரா, பல்லவ சாம்ராஜ்யம் என்றால் — அதிலே பாதிக்கு நீதானே சொந்தக்காரன்; அண்ணன் அரசன்; அவன் தம்பி நீ — நாட்டின் இளவரசனல்லவா?'

'தம்பியா? உம்; ஒரு தமிழ் படித்த பஞ்சைக்கு இருக்கும் செல்வாக்கிலே பத்தில் ஒரு பங்காவது இந்த அரசாங்கத்திலே எனக்கிருக்கிறதா —?'

'முத்துவீரா, வாழத் தெரியாதவனப்பா நீ! அந்தஸ்தும் அதிகாரமும் நம்மைத் தேடி வராதபோது — நாமே தான் அதைத் தேடி ஓடவேண்டும்!'

'என்ன சொல்கிறீர்கள்...!'

'சிம்மாசனம் உன்னைத் தேடி வராது—நீதான் அதைத் தேடிப் போகவேண்டும்'

'அப்படி யென்றால்...!'

'இன்னும் புரியவில்லையா... முத்துவீரா! நீ எதை விரும்புகிறாய் — சுற்றி வளைக்காமல் சொல்!'

'தூமகேது ... மணிமுடிக்கு—இந்த மண்டலத்தின் செங்கோலுக்கு நான் சொந்தக்காரனாக இருக்கவேண்டும்; இந்நாட்டின் செல்வம்—கூத்தாடிகளின் சொத்தாகிவிடக் கூடாது; புகழ்மிக்க பல்லவ சாம்ராஜ்யம், புலவர்களின் சோம்பல் மடமாகிவிடக் கூடாது!'

"................."

"தூமகேது...ஏன்; எதற்காக மௌனம் சாதிக்கிறீர்கள்!"

"முத்துவீரா, என் மூளை வேலை செய்ய ஆரம்பித்து விட்டது; ஆம்...அதுவும் உனக்காக, உன் எதிர்காலம் இன்பமாக யிருக்கவேண்டுமே என்பதற்காக!"

"தூமகேது! அப்படி என்ன திட்டம் உருவாக்கியிருக்கிறீர்;"

"முத்துவீரா...முள்ளை முள்ளால் தான் எடுக்கவேண்டும்; யானையை — யானையைக் கொண்டே பிடிப்பதுபோல—கலையைக் கலையால்தான் வெல்ல வேண்டும்: கையிலே வாள் வேண்டாம்; கண்களிலே வாளின் கூர்மை! வேல் வேண்டாம் அவனைச் சாய்க்க—வேல் விழி இரண்டு போதும்! மன்னனிடம் பகை எதற்கு; முத்து நகையாள் ஒருத்தி போதும்...?

"தூமகேது......!"

"முத்துவீரா...இது போன்ற நேரங்களில்தான் சிந்தையிலே தெளிவு—சற்று நிதானம் வேண்டும்!"

"என்ன இருந்தாலும் நெற்றியிலே பிறந்தவர்களல்லவா தாங்கள்"

"அப்படிச் சொல் முத்துவீரா!"

"முத்துவீரா; மேகலையை உனக்குத் தெரியுமல்லவா!"

"தெரியுமா ... வரிக்குவரி... மனப்பாடமாயிற்றே...!"

"அட அதைச் சொல்லவில்லையப்பா...; என்னோடு வந்தாளே, வாதாபியிலிருந்து—அந்த மேகலை!"

"ஓகோ, அவளா,? மேகலை! ஆமாம்!....தூமகேது—வாயெல்லாம் இனிக்கிறது அந்த வண்ணச் சிலை மேனியாளின் பெயரைச் சொன்னால்; நூலார் இடை! சேலார் விழி! சித்திர முகம்! செங்கனிவாய்! அந்தப் பருவக் கிளியை..தூமகேது..."

'போதும்..அதற்குள் போகப் பூனையாகிவிட்டீரே!'

'இல்லை...இல்லை அவள் ஓர விழியும்...ஒய்யார நடையும்—!'

'காரியம் முடியட்டும்...அந்தக் கனி எங்கே போய்விடப் போகிறது!'

"ஆமாம்! அந்த மேகலைக்கும்,...நம் திட்டத்திற்கும் என்ன சம்மந்தம்?..."

"இருக்கிறது...! முத்துவீரா. எப்படி...என்ன ஆகும்...எதையும் கேட்காதே...என் திட்டங்கள் வெற்றியடையும்போது... இந்த தூமகேதுவின் திறமைக்கு, என்ன பரிசு கொடுப்பாயோ அது எனக்குத் தெரியாது...சரி...நான் வருகிறேன்; நாளை இந்த நேரத்தில் இதே இடத்தில் சந்திக்கலாம்!'

❋

வட நாட்டிலிருந்து-மேகலை யென்ற ஒரு நாட்டியக்காரியோடு காஞ்சி வந்து: பொல்லாத நினைவுகள் நெஞ்சத்திலே குமுறிக் கொண்டிருக்க...மன்னனை மயக்கி எப்படியோ புலவர் அவையில் இடம்பெற்று விட்டவன் தூமகேது;

நந்தி வர்மனின் தம்பி—முத்து வீரன்! கலை மனம் இல்லா மரக்கட்டை, எடுப்பார் கைப்பிள்ளை; பதவித் தேனைச் சுவைக்க—பாதகம் புரிந்திடவும் — பாசத்தை அறுத்துக் கொள்ளவும் கலங்காத இரும்பு நெஞ்சன்;

அவன் சிந்தனை, ஒவ்வொரு விநாடியும் சிம்மாசனத்தை எட்டிப் பிடிக்கவே, துடிதுடித்துக் கொண்டிருந்தது; உடன் பிறந்தானின் சாவிலேதான்—அந்த அரசபோகம் உதயமாக வேண்டுமென்றால்? அதைப்பற்றியும் அவன் கவலை யெடுத்துக் கொள்ள வில்லை.

அன்று காஞ்சிமாநகரம், நில மடந்தை கலைக்கோலம் பூண்டு எழில் காட்டி நிற்பது போல், காட்சியளித்தது.

காரணம், தெள்ளாற்றுப் போரில் நந்திவர்மன் பெற்ற வெற்றியினைக் குறித்து விழா நடைபெற விருக்கிறது.

தங்க முகபடாம் அணிந்த பட்டத்து யானைமீது, தந்தத்தாலான அம்பாரியிலே—விலை உயர்ந்த மணிகள் இழைக்கப் பட்ட முத்துச் சிவிகையிலே, நந்திவர்மன் ஏறி வந்தான், மாபெரும் ஊர்வலம் அரண்மனையை அடைந்தது. நந்திவர்மன் அரசவையில் நுழைந்து கம்பீரமாக நடந்து சென்று, அரியணையில் அமர்ந்தான்.

காஞ்சிமா நகரமே களிப்பிலாழ்ந்திருந்த அந்த நேரத்தில், இரண்டு ஜீவன்கள் மட்டும் பொறாமைத் தீயால் கருகிக் கொண்டிருந்தன!

★

அமைச்சர் எழுந்தார், அத்தாணி மண்டபத்தில் சத்தங் குறைந்தது.

'நடனம் ஆரம்பமாகட்டும்!' இதைக் கூறி விட்டு அமைச்சர் உட்கார்ந்தார்.

கண்சாயல் கதை பேச, மேகலை மன்னனை வணங்கினாள்!

அழகுக்கு மன்னனும் தலை சாய்த்தான்! இடை நெளிவால், கடை விழியால், உடலசைவால், உணர்ச்சிகளை வடித்தாள்.

ஓவியம்போல் ஒரு விநாடி

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

16

இதற்குள் விஷயம் ரயில் முழுவதும் பரவி விட்டது. 'யாரோ ஒருத்தி அபின் கடத்திச் செல்லும் போது போலீசாரிடம் சிக்கிக் கொண்டாள்'' என்று அழகப்பன் காதிலும் செய்தி விழுந்தது. கடைசிப் பெட்டியிலிருந்த டைகரும் கேள்விப்பட்டானே யொழிய, சிந்தாமணிதான் சிக்கிக் கொண்டாள் என்பது அவனுக்குத் தெரியாது.

ரயில் பெங்களூரில் வந்து நின்றது. புறாக்கூடு திறக்கப்பட்டது போல மக்கள் ரயில் பெட்டியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள். போலீசார் புடைசூழ சிந்தாமணியும் இறங்கினாள். அவள்மீது பழியைப் போட்டுத் தப்பித்துக் கொண்ட அந்தப் பகட்டுக்காரி மிக நல்லவள் போல முகத்தில் கடிப்பைத் தேக்கியவாறு ரயிலை விட்டு வெளிவந்தாள். டைகரும், பரபரப்போடு சிந்தாமணியைக் காண ஓடிவந்து கொண்டிருந்தான். அதற்குள் போலீசாரையும் சிந்தாமணியையும் மக்கள் சூழ்ந்து கொண்டு வேடிக்கை பார்க்கத் துவங்கினர். போலீசார், தலையைக் கண்ட டைகர், மிரட்சியோடு கூட்டத்துக்குள் நுழைந்தான். "இதோ அவள்தான்! அவளைத்தான் போலீசார் பிடித்திருக்கிறார்கள்!'' என்று கூட்டத்தினர் சுட்டிக் காட்டிய வண்ணம் அங்குமிங்கும் அலைந்தனர். கைது செய்யப்பட்டவளைப் பார்ப்போமே யென்று கூட்டத்திற்குள்ளே தலையை நீட்டினான் டைகர்! ஒருக்கணம் தலை சுற்றியது அவனுக்கு! தன் எதிரே பார்க்கும் காட்சி என்ன—என்று தன்னைத் தானே உரக்கக் கேட்டுக் கொண்டான். தன்னிடமிருந்து தப்புவதற்காகவே அவள் போலீசாரிடம் சிக்கிக் கொண்டாளா? இப்படியொரு கேள்வி அவனை ஆட்கொண்டது. அவளுக்கல்லவா தெரியும் அவள் படும் வேதனை! வெள்ளிக்கிழமை பொழுது விடிந்தது—விபச்சாரிப்பட்டம்கிடைத்தது! விநாசகாலம் சம்பவித்தது! இப்போது, போலீசார்கையிலே சிக்கும் நிலை பிறந்தது! இவைகளைவிட ஒரு பெண்ணின் வாழ்விலே கொடுமைகள் விளைய வேண்டுமா? இவை போதாதா; அவளை உயிரோடு வைத்து அணு அணுவாகக் கொன்று குவிக்க!

"தப்பிவிட்டாளே தன்னிடமிருந்து!''—டைகர், பெருமூச்சுவிட்டான். பூனை வாய்க்கிளி, பூட்டிய கூண்டுக்குள் அடைபட்டால் பூனைக்கு ஏக்கந்தானே பிறக்கும்! இருபுறமும் தொல்லை கொண்ட கிள்ளையானாள் சிந்தாமணி. அவளை விடுவிக்க மார்க்கமே கிடையாதா? டைகர் யோசித்தான். தானே, போலீசாரை ஏமாற்றி

சென்ற இதழில்....

டைகரால் துரத்தப்பட்டு சிந்தாமணி ஓடி, இறுதியில் பெங்களூர் போகும் புகை வண்டியில் ஏறுகிறாள். டைகரும், வண்டியின் கடைசிப் பெட்டியில் ஏறிக் கொள்ளுகிறான். அதே ரயிலில், அழகப்பனும் அவன் தாயும், தாங்கள் வந்த கார் பழுதாகி விட்ட காரணத்தால் ஏறிக்கொள்ளுகிறார்கள் முதல் வகுப்பில்! கள்ளத்தனமாக அபின் கடத்தும் ஒருத்தி போலீசாரிடம் சிக்கிக் கொள்ளும் தருவாயில், பழிலையத் தந்திரமாக சிந்தாமணியின் தலையில் போட்டு விடுகிறாள். சிந்தாமணி கைது செய்யப் படுகிறாள்......பிறகு...

ஓடிவந்தவன். இப்போது வலியப்போய் சிக்கிக்கொண்டால்—அதைவிட அறிவீனம் எதுவுமில்லை யென்று குழம்பினான். சரி, நடப்பது நடக்கட்டும் என்ற தீர்மானத்தோடு சற்று தொலைவில் நின்று கவனிக்க ஆரம்பித்தான்.

அழகப்பனும் அவன் தாயாரும் முதல் வகுப்பு வண்டியிலிருந்து இறங்கி, கூட்டம் நிற்கும் பக்கமாக வெளியேபோக முயன்றார்கள். "அவள்தான் அபின் கொண்டுவந்து அகப்பட்டுக் கொண்டவள்!'' என மக்கள் சுட்டிக் காட்டி அறிவித்துக் கொண்டிருப்பதைக் கண்ட அழகப்பனுக்குத் தானும் அவளைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் ஏற்பட்டது. தாயாரை மெதுவாக அழைத்தவாறு, கூட்டத்தில் எட்டி எட்டி அவளைப் பார்க்க முயற்சி செய்தான். முடியவில்லை. பேலீசார், அவளை அழைத்துக்கொண்டு முன்னே போக, பின்னே—தாயாருடன் அழகப்பன் போய்க்கொண்டிருந்தான். அழகப்பன் செல்வதை டைகர் பார்த்துவிட்டான். எங்கே அழகப்பனும் சிந்தாமணியும் சந்தித்து விடுவார்களோ என்ற பயம் அவனைப் பிடித்துக் கொண்டது. தன்னைத் தேடித் திரியும் போலீசாரிடம் ஏற்படுகிற அச்சத்தைவிட அதிகமான அச்சம் அவனைச் சூழ்ந்தது. அழகப்பனையே கூர்ந்து கவனித்தவாறு பின்னாலேயே நடந்தான்.

புகைவண்டி நிலையத்தின் முன்புறத்தில் "போலீஸ் வேன்'' நின்று கொண்டிருந்தது. சிந்தாமணியைப் போலீசார் அதில் கொண்டுபோய் ஏற்றினார்கள். ஏறும் போது அவளை யாரும் பார்த்துவிட முடியும். இப்போது அழகப்பன் அவளை நிச்சயமாகப் பார்த்து விடப் போகிறான். அவள் உடனே தன் கதையைச் சொல்லி அழப் போகிறாள். அழகப்பனும் நம்பிவிடப்போகிறான். பிறகு தன் திட்டமெல்லாம் விழலுக்கிறைத்த நீராகப் போய் விடும். இவ்வாறு எண்ணமிட்டவனாய் டைகர் துடித்துக் கொண்டிருந்தான். போலீஸ் வண்டியின் படிகளில் அவள் ஏறி வண்டிக்குள் நுழையும்போது, அழகப்பன் அவளைக் காண விரும்பி அருகே அவசரமாக வந்தான். அவன் வருவது அவளுக்கும் தெரியாது, அவனுக்கும் அவள்தான் சிந்தாமணி யென்றும் தெரியாது. வண்டியில் நுழையும் போது, முகத்தைத் திருப்பி, மக்களைப் பார்த்திருப்பாளே யானால் அவளை அழகு, உடனே அடையாளம் கண்டிருப்பான். அவள் எதற்காக மக்கள் பக்கம் முகத்தைத் திருப்பப் போகிறாள்! பொது ஜனக் கோரிக்கைக்காகப் போராட்டம் நடத்தி அடக்கு முறைக்கு ஆளாகிச் சிறை செல்லும் 'சமூக சேவகி'யா அவள்? இல்லை! சமுதாயத்தின் 'கழிசடை'யாகி விட்டவள். கன்னி கழியாப் பருவத்திலே கருவுற்று, அபின் கடத்தும் தொழில் நடத்தி ஜீவிக்கும் மனிதப் புழு என சமூகத்தால் வர்ணிக்கப்படும் நிலையிலே உள்ளவள். அவள் ஏன், மக்களைத் திரும்பிப் பார்க்கப் போகிறாள்! திரும்பவில்லை. அதனால் அழகப்பனும் அவளைப் புரிந்து கொள்ளவில்லை. பேதையின் பின்னழகை மட்டுமே கண்டான்.

"கொஞ்ச வயசுக்காரிதான் அம்மா!'' என்றான்.

"பலே கைகாரி போலிருக்கு!'' என்றாள் தாய்!

அந்தத் தாய்க்கு மருமகளாக வந்திருக்க வேண்டிய மாணிக்கப் பதக்கம், சிந்துவாரற்றுச் சீரழிந்து போய்விட்டது. 'போலீஸ் வேன்' புறப்பட்டது, புழுதியில் வீசப்பட்ட அந்தப் புனிதவதியை ஏற்றிக் கொண்டு!

அழகப்பனும், தாயாரம்மாளும் வாடகைக்கார் ஒன்றில் ஏறி வீடு நோக்கிப் புறப்பட்டனர். அழகப்பனின் விலாசத்தைத் தெரிந்து வைத்துக் கொள்ள விரும்பிய டைகர், இன்னொரு வாடகைக் காரில் பின் தொடர்ந்தான். அழகப்பனுடைய வீடு எது என்பதை விபரமாகத் தெரிந்து கொண்டு, காரிலேயே திரும்பினான்.

சிந்தாமணி, போலீஸ்காரர்களிடமிருந்து விடுபட்டு, "லாக் அப்''பிலே அடைக்கப்பட்டாள். கரப்பான் பூச்சிகளும், வௌவால் புழுக்கைகளும் நிறைந்த அந்த இருட்டறையிலே வாழ்வின் ஒளி தேடிக் கிளம்பிய வைர நிலவு வீழ்ந்து கிடந்தது. "மங்களகர''மான வெள்ளிக்கிழமை, தன் கடையைக் கட்டிக் கொண்டு, சனிக்கிழமைக்கு வழிவிட்டது.

* * *

பலகணி வழியே உதய சூரியனின் பொற் கரங்கள் நீட்டப்பட்டு, பாலையூர் மருத்துவமனையிலே ஆனந்தி, துயிலுதறியெழுந்தாள். நயினா முகம்மது, அருகே வந்து, "ஆர்லிக்ஸ் போடட்டுமா?'' என்றான். தேவைதான் எனும் விதத்தில் அவளும் தலை யசைத்தாள். இரவு பேசிய பேச்சுக்கள் அவர்கள் இருவரையும் நாணத்

தில் ஆழ்த்தியிருந்தன. அந்தப் பேச்சின் தொடர்ச்சியாக அவர்கள் பார்வையிலே விதவிதமான மாற்றங்கள் பிரகாசித்தன. அன்று பகல் முழுவதும் மௌனமாகவே இரண்டு இதயங்களும் எண்ணங்களை முழங்கிக் கொண்டிருந்தன. பேசுவதால் காணுகிற முடிவைவிட, மௌனத்தாலும், விழியசைவாலும் சிறந்த முடிவைக் காணமுடியுமென்பது காதல் இலக்கணம். காதலுக்கு இணக்கம் தெரிவிக்கும் உள்ளம் பெற்றிருப்பவர்கள்கூட, நாணத்தாலோ—அச்சத்தாலோ, அந்த எண்ணத்தை வார்த்தை வடிவில் வெளியிடத் தயங்குவார்கள். "நான் உன்னைக் காதலிக்கிறேன்" என்று திடுமென ஒரு பெண்ணிடம் சென்று பேசிவிட்டால், இஷ்டமுள்ளவளாயிருந்தால்கூட, "எட்டி நில்" என்று கூறுவாளே தவிர, "கட்டிக் கொள்வாய் கண்ணாளா!" என்று கிட்ட வர மாட்டாள்! அதனால்தான் காதல் மாளிகையின் முதல் நுழைவுவாயில் என்று கண்கள் சிறப்பிக்கப்படுகின்றன. கண்கள் மாத்திரம் இல்லாவிட்டால், காதலர்கள் இருதயமென்னும் சுவரேறிக் குதித்தல்லவா காதல் மாளிகைக்குள் நுழைய வேண்டும். வாழ்க, அந்தக் கண்கள்—இப்படி விழிகளுக்கு வாழ்த்துக் கூறியவாறு பகல் ஒழிந்தது. இரவு வந்தது. நயினுமுகம்மது, ஆனந்திக்கு வேண்டிய உபசரணைகளைச் செய்துவிட்டு அருகே அமர்ந்தான்.

"நீங்கள் தூங்கவில்லையா?" என்று வாய் திறந்தாள் ஆனந்தி.

"அவசரமில்லை" யென்றான் அவன்.

சிறிது நேரம் மௌனம். வீணாக அவன் மனதைக் கலக்கிவிட்டு வேடிக்கை பார்க்கிறோம்; எனத் தனக்குள் வேதனைப்பட்டாள் ஆனந்தி.

டைகரைப் பற்றிய உண்மையைச் சொல்லாமல், தானொரு கற்புக்கெடாத பெண்மணியென்று கூறியிருந்தால் நயினுவின் பரிபூரண அன்பைப்பெற்றிருக்க முடியுமே! இதுபோல ஒருக் கணம் நினைத்தாள்.

"சே! சே!! அப்படி இருவரும் ஒன்றாகி, ஒருநாள் உண்மை அம்பலமாகிவிட்டால்.....அவர் உள்ளம் எப்படிச் சிதறிவிடும்?" உண்மையைக் கூறியதற்காகத் தன்னைத் தானே பாராட்டிக் கொண்டாள்.

"என்னைத் தயவு செய்து வெறுத்து விடுங்கள்!" என்றாள் கண்களில் நீர் கலங்கியவாறு!

"முடியாது ஆனந்தி! நான் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டேன். உன் வாழ்க்கைக்கு இனிமேல் நான்தான் துணைவன்!"

"அப்படியானால்...?"

"நீயோ நானோ மதம் மாறிவிட வேண்டியதுதான்!"

"மதம் ஏன் மாறவேண்டும்-மனம் மாறாமலிருந்தால் போதும்!" என்று கூறியபடி அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டு கலகலவெனக் கண்ணீர் உகுத்தாள் ஆனந்தி. அந்தக் கண்ணீர் இருதயத்திலிருந்து புறப்பட்ட புண்ணீர் அல்ல! பரவசத் திருவிழாவில் தெளிக்கப்படும் பன்னீர்!—இருவர் கரங்களும் ஒன்றையொன்று பின்னிக் கொண்டன; இருதயங்கள் இணைந்து ஒன்றாகிவிட்டன என்பதின் அடையாளமாக!

* * *

ஒரு வாரத்திற்கு மேலாகிறது; ஆனந்தியின் உடல்

அடுத்த இதழில்....

மு. க. எழுதும்

"உதய சூரியன்"

அரசியல் விளக்க நாடகம்!

நிலை பற்றி நயினுவிடமிருந்து எந்த பதிலும் வரவில்லையேயென்று ஏங்கிக் கொண்டிருந்தான் அழகப்பன்.

சிந்தாமணியால் ஏற்பட்ட அவமானகரமான ஏமாற்றத்தைப் போக்கிடும் ஆற்றல் ஆனந்தி ஒருத்தியிடமே இருப்பதாக நினைத்து, அந்த நினைவால் மகிழ்ந்திருப்பவன் அழகப்பன். அம்மாவுக்கு ரொம்பப் படித்த பெண் என்றால் பிடிக்காது. அதுவும் லேடி டாக்டர் என்றால் அறவே ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஆனால் ஆனந்தியின் விஷயத்தில் அம்மாவையும் சமாதானப் படுத்தி விடலாம் என்ற நம்பிக்கை அழகப்பனுக்கு உதயமாயிற்று. அது ஆசையின் விளைவு. வேதபுரமிருந்து திரும்பியது முதல் ஆனந்தியின் பெயரையே உச்சரித்தபடி உழன்று கொண்டிருந்தான். "இன்றைக்காவது நயினுவிடமிருந்து ஏதாவது தபால் வராதா?" என்று எதிர்பார்த்தவாறு உட்கார்ந்திருந்த அழகின் முன்பு, டைகர் வந்து நின்றான். அவனைப் பார்த்த அழகு திடுக்கிட்டான். மிகமிக சோகத் தோற்றமுடன் நின்ற டைகர், அழகப்பனைக் கண்டதும் "ஆனந்தி!" என்று வாய் விட்டு அலறி விட்டான்.

"ஆனந்திக்கு என்ன? என்ன நடந்தது?" என நடுங்கியவாறு எழுந்தான் அழகு!

"நேற்று முன்தினம் ஆனந்தி இறந்து விட்டாள்!" என்று கூறி விட்டு டைகர் தொடர்ந்து அழத் தொடங்கினான். அழகப்பனுக்கு நிற்க இயலவில்லை. அவன் மனக் கோட்டைகள் இடிந்து தூள் தூளாகி விட்டன. ஆசைக் கனவுகள் அரும்பிலேயே கலைந்து விட்டன.

இருண்டுபோன குகையின் வாசலில் தள்ளப்பட்டது போல் ஆகிவிட்டான்,

"கைத் தடியில்லாத குருடன் கல்லும் முள்ளும் நிறைந்த காட்டில் விடப்பட்டதுபோல் ஆகிவிட்டதே என் நிலைமை" என மனதுக்குள் சொல்லி கண்ணீர் வடித்தான்.

நீண்ட நேரமௌனம். தாயாரம்மாள் வந்தாள், தடுமாறியவாறு! செய்தி கேட்டு அவளும் சுருண்டுபோனாள்.

"நயினு முகம்மது என்ன ஆனான்?" என்று அழுகையை அடக்கியவாறு அழகு கேட்டான்.

"அய்யோ! அதையேன் கேட்க வேண்டும்—மூன்று நாளாகிறது—வீட்டிலேயிருந்த நகை நட்டுக்களை மூட்டை கட்டிக்கொண்டு, உங்கள் நண்பன் எங்கேயோ கம்பி நீட்டி விட்டான்..." எனச் சொல்லி மேலும் அழுதான், டைகர்!

இந்த வார்த்தைகளை அழகப்பனால் நம்பமுடியவில்லைதான்—ஆனாலும், அந்த டைகர் அழுது கொண்டே சொல்கிறானே; நம்பாமல் என் செய்வது?

தன் நண்பன் இவ்வளவு பெரிய கயவனா? ஒரே குழப்பம் அவனுக்கு!—டைகர், அழகப்பனை வெகு விரைவில் தன் பக்கம் திருப்பிக்கொண்டான். தாயாரம்மாளும் டைகர் பக்கம் சேர்ந்துகொண்டு, நயினுவுக்கு அர்ச்சனைகள் செய்தாள்.

இறுதியில் டைகரிடம், அழகப்பன் ஒரு ஆயிர ரூபாய்க்கு நோட்டுக்கத்தையைக் கொடுத்து ஆறுதல் கூறினான்.

"ஆயிரம் ரூபாய், ஆனந்தியின் உயிருக்கு சமமாகுமா?" என ஒப்பாரி வைக்கத் தொடங்கினான் டைகர். அவனை சமாதானம் செய்து, அழகப்பனும், அவன் தாயாரும் வழி அனுப்பி வைத்தார்கள்.

டைகர், மூக்கைச் சிந்தியவாறே அந்த பங்களாவை விட்டு வெளியேறினான். அவன் வெளியிற்சென்று கால்மணி நேரத்திற்கெல்லாம் தபால்காரன், ஒரு கவரை அழகப்பனிடம் கொடுத்தான். கவரின் மேலேயுள்ள விலாசம் நயினு முகம்மதின் கையெழுத்துபோல இருந்தது. நயினுவின் எழுத்துக்களைக் கண்டதும், அழகு, அந்த அஞ்சலை அவசர அவசரமாகப் பிரித்துப் படித்தான்,

(தொடரும்)

❊ 5-ம் பக்கத் தொடர்ச்சி

அசைவற்று நிற்பாள், விழிகள் மட்டும் காவியம் பாடும்!

அந்தப் பெண்ணழகின் கண்ணொளியிலே மயங்கினான் மன்னன், அவன் விரல்கள் தன் கழுத்திலே இருந்த முத்தாரத்தை கழற்றின, அவன் கரங்கள் அந்த விலையுயர்ந்த முத்து மாலையை அவளிடம் நீட்டின, அவன் கண்கள் இமைக்காமல் நின்றன!

அகில் ஊட்டிய கூந்தல் தோள்களில் புரள, துகில் பூட்டிய அப்பொன்மேனியாள்—முகில் மாடத்து நிலா போல, தலைகுனிந்தாள். "எம் தமிழ் வளர்க்கும் கொற்றவனே, நான் பெரும்பேறு பெற்றேன்!" அவள் பழ உதடுகள் அசைந்தன. அங்கிருந்து அகன்றாள் மேகலை.

கலை உள்ளம் படைத்த காவலன், அழகு அங்கிருந்து விலகுவதைக் கண்டு அலைபட்ட துரும்பு போல் தத்தளித்தான்.

தூமகேது தான் போட்ட தூபம் அணைந்து விடவில்லை, தன் திட்டம் வெற்றியடையும் நாள் வெகு தூரத்தில் இல்லை, யென்று தனக்குள் பூரித்துக் கொண்டான்.

முத்துவீரன், தமிழ் குலத்திலே தவறிப் பிறந்து விட்ட சொத்தை — தூம கேதுவைத் தூண்டி விட்டான்!

❊

'முத்துவீரா! பல்லிளித்துப் பழகினேன் மன்னனிடம் என்றுயே! பார்த்தாயா? பல்லிளித்து நின்றாலும் பழி வாங்கும் எண்ணத்தை மறந்து விடுவேனா நான்! பார்! தூண்டில் போட்டிருக்கிறேன்; பலன் கிடைப்பதற்கு அதிக நாள் பிடிக்காது!" - இருவரும் பிரிந்து சென்றனர்.

ஒரு நாள்—

'மேகலை! இதைக் கவனமாகக் கேள்! இந்த ஓலையில் எழுதியிருக்கும்—எட்டு வரிகளை; இசையமைத்து மனப்படமாக்கிக்கொள்; இன்றிரவு நந்தி வர்மன் அந்தப் புரத்திலே தனித்திருக்கும்போது...

'ஆ!...'

"அவசரப்படாதே...!"

அந்தப்புரத்திற்கு நீ செல்ல வேண்டும்; மூன்றாவது வாயிலில் நின்று அவன் செவிகளுக்குக் கேட்கும்படி — இனிமையான குரலோடு குழைத்துப் பாடு—பாடிமுடித்ததும் அங்கு நிற்காதே — அவன் கண்களில் படுவதற்கு முன் ஓடிவந்துவிடு'

பிறகு...!

'அந்தக்கவலை உனக்கு வேண்டாம்; சொல்லியதை—முடித்து வா!'

❊

மன்னனை சாய்க்க ஏதோ சூது நடக்கிறது என்பதை மட்டும், அந்த அழகி நன்றாகத் தெரிந்துகொண்டாள்; 'பாவி... பழி பாவங்களுக்கு அஞ்சாத மனித மிருகமே!' அவள் மென்மையான இதழ்கள் இந்த முரட்டு வார்த்தைகளை சிரமப்பட்டு உச்சரித்தன.

தூமகேதுவின் ஏவல்படி அன்றிரவு—மேகலை அந்தப் புரத்தின் ஒரு ஒதுக்குப் புறத்தில் நின்று—அந்த எட்டுவரிகளை, இதய நாதமாக்கி—சோக இழைகளால் இசையமைத்துப் பாடினாள்.

❊

இசை கேட்ட மன்னன்; அந்த உயிர் பறிக்கும் குரல் வந்த திசை யெதுவோ? குரல் கொடுத்தக் குயில் எதுவோ? என்று தேடினான்; அந்தப் புரத்தைவிட்டு அரண்மனை யெங்கும் தேடினான்; யாரும் அவன் கண்ணில் படவில்லை; சோகம் கப்பிய இதயத்தோடு அந்தப்புரத்திற்குத் திரும்பினான்; அன்றிரவெல்லாம்; அந்த இனிமையான கீதம்; அதை நினைத்தே வருந்தினான்! தன் வாழ்நாளில் மீண்டும் ஒருமுறையாவது, இதுநாள்வரை அவன் கேட்டறியாத அந்த ஒப்பற்ற 'கலம்பகத்தை' —எப்படியாவது கேட்க எண்ணினான். மறுநாள் புலவர் அவையில் முறையிட்டான் தன் நிலையை, இரவு நடந்த சம்பவத்தை!

❊

தூமகேது எழுந்து நின்றான்; இரவு மன்னன் கேட்ட அந்த கவிதையின் எட்டு வரிகளையும்—வசன நடையில் உச்சரித்துக் காட்டி; 'இக்கவிதைதானே தங்களைக் கவர்ந்தது' என்றான்.

நந்தி வர்மன் அரியணையை விட்டு இறங்கினான். தூமகேதுவை இரு கரங்களால் அணைத்துத் தழுவியபடியே—

"கவிஞரே! தங்கள் புலமையை இதுநாள்வரை நான் மறந்திருந்தேன். இதே கவிதை தான். ஆனால் குரலில் இன்பம் இருந்தது, கவிஞரே... நேற்றிரவு நான் கேட்டது பெண் குரல்!"

பெண் குரல்தான்; அன்று அரசவையிலே ஆடினாளே, மேகலை, என் வளர்ப்புப் பெண், அவள் பாடியிருப்பாள்.

"மேகலையா, அந்தக் கலையரசி, கானத்திற்கும் அரசியா? தூமகேது நான் அவள் இசைக் கலையை அனுபவிக்க வேண்டும், என் உயிர் பறித்த அந்த தேன் குரலை—மீண்டும் ஒருமுறை நான் ரசிக்க வேண்டும்.'

"குயிலைக் கோலாலடித்துப் பாட வைக்க முடியுமா?"

"முடியாதுதான்.......ஆனால்!

"ஆனால்...!"

"அந்த இசையை—மீண்டும் ஒருமுறை கேட்காவிட்டால்... என் மனம் அமைதியடையாது; மறையவரே...நீங்கள் மனம் வைத்தால் மார்க்கம் கிடைக்காமலா போகும்......மன்னன் நான், இந்த மண்டலத்தின் மகுடபதி.........வேண்டுகிறேன்...என் கலைப் பசி, என்னையே கொன்றுவிடும் போல் இருக்கிறது...கருணை காட்டுங்கள்!"

"சரி...முயன்று பார்க்கிறேன்!"

❊

தூமகேது; களிப்புப் பெருமூச்சு விட்டான், 'முத்துவீரா......கொடுத்து வைத்தவனப்பா நீ!......மணிமகுடம்..... இனி அதற்கு நீதான் சொந்தக்காரன்!" இருவரும் கலகலவென்று சிரித்தனர், தூமகேதுவின் சிரிப்பிலே பயங்கர நினைவுகள் சிதறின.

❊

அன்று! அரண்மனைக்கு எதிராக ஒரு பெரிய கீற்றுப் பந்தல் போடப்பட்டது. மன்னனுக்கென்று ஒரு தனி ஆசனம், அந்த ஆசனத்தில் மன்னனைத் தவிர யாரும் உட்கார முடியாது, அந்த ஆசனத்தின் அடிப் பாகத்திற்கு, சுரங்கப் பாதை வழியாக ஒருவன் வந்து திரும்ப முடியும்–எல்லாம் தூமகேதுவின் ஏற்பாடு!

❊

"எம் கொற்றவனே; மேகலை...தன் பூஜா பலத்தால் பெற்ற இசைக் கலையை இதுவரை பலர் முன்னிலையில் பாடினதில்லை; மன்னரின் வேண்டுகோள்; இறைவனின் வேண்டுதலுக்கு சமம் என்பதால்...பெரிய மனதோடு மேகலை சம்மதித்தாள்.'

"மகிழ்ச்சி புலவரே!"

"ஆனால்...!

"ஆனால்...? மன்னன் வியப்போடு கேட்டான்!"

"மன்னவா! முன்பே குறிப்பிட்டேன், தெய்வீக பலத்தால் அவள் பெற்ற பரிசு அந்த இசைக்கலை என்று.! மேகலை கானமிசைக்கும் போது தவறான நோக்கத்தோடு அவையினர் யாரேனும் அவள் பேரெழிலை ரசிக்க நினைத்தால், ...வேந்தே!... புயல் வரலாம்... பூகம்பமெழலாம்; இந்த சாம்ராஜ்யமே புழுதிமேடாகலாம்; எதையும் என்னால் முன்கூட்டி தெரிவிக்க இயலாது...அது அவள் பெற்றவரம்!" தூமகேது இதைச் சொல்லும்போது பயங்கரமாகத் தோற்றமளித்தான்!

பல்லவன் திகைத்தான்; அவையிலே இருந்தவர்களில் பலர் வெளியேற்றப்பட்டனர்!

சோகமே வடிவம் தாங்கி நடந்து வருவதுபோல், மேகலை நுழைந்தாள்; மன்னன் தனக்கென தனியாகப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தான். மேகலை—மன்னனுக்கு நேராக சற்று தூரத்தில் உயர்ந்த ஆசன மொன்றில் வந்து அமர்ந்தாள்; பின்னணிகள் இசைபாட, மேகலை குரல் எடுத்துப் பாடினாள்: கூடியிருந்தோர் இதயங்களெல்லாம் இன்ப அசைவுகளால் விரிந்து கொடுத்தன.

பல்லவர் கோமன்;— அச்சடித்த பதுமைபோல — நாத வெள்ளத்தில் நினைவுகளைப் பறிகொடுத்துவிட்டு மயங்கியிருந்தான்.

பாட்டுமுடிந்தது; கூடியிருந்தோர் கூக்குரல் எழுப்பினர்; மன்னனின் தந்த நிறமேனி தீயின் சிவப்பு நாக்குகளால் தழுவப்பட்டன! அவன் அமர்ந்திருந்த மேடை உருகி தீக் குழம்பாயிற்று—அவன் சுய நினைவு பெறுவதற்குள்–அந்த தீக்குழம்பிலே சிக்கி — பல்லவர் குலத் திலகம் பிணமாக சாய்ந்தான்! அனல் பட்டு உருகிய அந்த அரக்குமேடையில், மன்னனின் உடல் புதையுண்டு கிடந்தது.

❊

"கடவுள் சாபம் பலித்து விட்டது! காமவெறி பிடித்த எவனோ—கழுகுப் பார்வையை அவளிடம் திருப்பி யிருக்கிறான்" இப்படி ஊர் பேசிக் கொண்டது!

❊

"முத்துவீரா! கத்தியில்லை—ரத்தமில்லை—கைமேல் பலன்!"

"அண்ணனுக்கு அரக்கு மேடை! எனக்கு அரச பீடம்! சபாஷ் தூமகேது!"

முத்துவீரன் தூமகேதுவின் முதுகைத் தட்டிக் கொடுத்தான், இருவருமே சேர்ந்து கலகலவென்று சிரித்தனர்!

❊

நிதி அனுப்புவோர் கவனிக்க

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்குப் பணம் அனுப்பும் தோழர்கள் "பொதுச் செயலாளர், தி. மு. கழகம், அறிவகம் இராயபுரம், சென்னை 13. என்ற முகவரிக்கே அனுப்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

தி. மு. க. தலைமை நிலையம்.

நன்றி அறிவிப்பு

14—7—56-ல் கோகலே மண்டபத்தில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற எங்கள் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு வந்திருந்தும் வாழ்த்துச் செய்திகளை அனுப்பியும், பரிசுகளை வழங்கியும் எங்களை மகிழ்வித்த அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரியப் படுத்திக் கொள்ளுகிறோம்.

ஏ. கே. வில்வம்.

அருண்மொழி.

வழி கொடுத்தது இமயம்! தடை தந்தது தமிழ்க் கடல்!

✻ 4-ம் பக்கத் தொடர்ச்சி

வாழ்ந்த சாமோரின்கள்கூட தங்களுக்கு "மலைகளுக்கும் சமுத்திரங்களுக்கும் மன்னவர்கள்" என்று பொருள்படும் பட்டத்தைத்தான் கட்டிக் கொண்டார்கள்!

முப்பெருங் கடலை பலவீனத்தின் இருப்பிடம் என்று கேலி பேசிய தோழரே! சற்று சிந்தித்துப் பாருங்கள்.

வடநாட்டு ஏகாதிபத்தியம் இப்போது கூட கடற்கரைப் பட்டினங்களை நம்பித்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறது!

கடல் எல்லையாக இருப்பது பாதுகாப்புக்கு ஊனம் செய்வது எனக் கருதி இந்திய அரசாங்கம் கடற்கரையை யெல்லாம் பாகிஸ்தானுக் களித்திருந்தால் டெல்லி மூலஸ்தானத்திற்கு இன்று ஒரு துறைமுகம் கூடக் கிடைத்திருக்க முடியாது!

கடலின் பெருமையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் தோழரே, இந்த உப கண்டத்தின் பழைய வரலாற்றினைத் திருப்பிப் பாருங்கள்!

18, 19-ம் நூற்ருண்டுகளில் உலகரீதியில் வாணிபம் தழைத்தோங்குவதற்கு முன்னால், வடநாட்டிலே முக்கியத்துவம் பெற்றிருந்த நகரங்கள் என்னென்ன?

டெல்லி, ஆக்ரா, அலகாபாத் காசி—போன்றவைகள்தான்!

வாணிபம் சர்வதேச ரீதியில் பெருகிய பிறகு அங்கே சிறப்பு பெற்றிருக்கும் நகரங்கள் என்னென்ன?

கல்கத்தா, பம்பாய்,—இது போன்றவைகள்!

மறந்து விடாதீர்கள்; இந்த நகரங்களெல்லாம் கடலால் பெருமை பெறும் துறைமுகப் பட்டினங்கள்!

அதுமட்டுமா? இந்த உபகண்டத்தின் வியாபாரத்தில் 85 சதவீதம் கடலைக் கருவியாகக் கொண்டுதான் நடைபெறுகிறது.

—இது தெரியாமல் கூறிவிட்டார், கடல் இருப்பதால் நாளை மலரப்போகும் சுதந்தரத் திராவிடம் பகைவரின் கைப்பாவையாகி விடுமென்று!

நாளை திராவிடம் பிரிந்தால் மட்டுமல்ல; இன்றும் கூட இந்த உபகண்டம் மூன்று கடலினால்தான் சூழப்பட்டிருக்கிறது.

கேள்வி கேட்டவரின் கருத்துப்படி, வடநாடோ இமயம் என்கிற மாபெரும் அரணைப் பெற்றிருக்கிறது.

ஆனால் எந்தப் பக்கமிருந்து இந்த உபகண்டத்திற்கு அன்னியர்கள் வந்திருக்கிருர்கள்—என்று சற்று சரித்திரத்தைத் திருப்பிப் பார்ப்போம்.

புல் இருக்குமிடமெல்லாம் ஆடுமாடுகளை ஓட்டி வந்த ஆரிய இனம் திராவிட இந்தியாவில் புகுந்தது வடக்கு திசையிலிருந்துதான்!

செல்யூகஸ் நிகேட்டர். என்னும் கிரேக்க நாட்டு வீரன் படைகொண்டு வந்தானே; மூன்று பக்கமும் 'திறந்து' கிடப்பதாகக் கேள்வி கேட்பவர் கற்பனை செய்து கொண்டிருக்கிருரே; அந்தத் தென்னகத்தின் வழியாகவா வந்து புகுந்தான்'? அல்ல; அல்ல! வட திசைதான் அவனுக்கு வழி விட்டது! இமயத்தின் இடைவெளிதான் அவனுக்குப் பாதை வகுத்துக் கொடுத்தது!

மாவீரன் அலெக்சாண்டர் வந்த மார்க்கம் எது? குஷானர்கள் எப்பக்கமிருந்து வந்தார்கள்?

இதைத் தவிர தைமூர், பாபர், கஜினிமுகம்மது, கோரிமுகமது—இந்த அன்னியர்களெல்லாம் இந்த உபகண்டத்துக்குள் நுழைந்தது எவ்விதம்?

இமயமலை இருப்பதாகச் சொல்லப்படும் அந்த வடதிசைதான் அவர்கள் வந்த திசை!

இது வரை பார்க்கப்போனால் வடதிசையிலிருந்து இந்த உபகண்டத்துக்குள்ளே நுழைந்த குறிப்பிடத்தக்க அன்னியர்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்து விடலாம்:

ஆரியர்கள்
பாரசீகர்கள்
அலெக்சாண்டர்
சாக்கியர்கள்
குஷானர்கள்
ஹூனர்கள்
முகமது பின் காசிம்
முகமது கஜினி
முகமது கோரி
கில்ஜிகள்
துக்ளக்குகள்
லோடிகள்
மொகலாயர்கள்.

—இதுபோன்ற அன்னியர்கள் இயற்கை அரண் இருப்பதாகச் சொல்லப்படும் வட திசையிலிருந்து வந்து இந்த உப கண்டத்தை ஆண்டிருக்கிருர்கள்.

ஆனல் தென் திசையிலிருந்து, முப்பெரும் கடற் பரப்பிலிருந்து இந்த உப கண்டத்துக்குள்ளே நுழைந்தவர்கள் யார்?

ஐரோப்பியர்கள்தான்—அதிலும் முக்கியமாகக் குறிப்பிடப் பட வேண்டியவர்கள் ஆங்கிலேயர்கள்தான்!

இப்போது முடிவு கட்டுங்கள்! எந்த அரண் பெரியது? மலை அரணு? கடல் அரணு? நிச்சயமாகக் கடல் அரண்தான்! இந்திய சரித்திரத்தைப் பொருத்த வரையில் இந்த வாதம்தான் நிரூபிக்கப் பட்டிருக்கிறது.

ஆனல் ஒரு உண்மையை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் ஒரு சில ஏகாதிபத்தியங்கள் பலம் வாய்ந்த கப்பற்படையை வைத்துக் கொண்டு பிற நாடுகளில் தங்கள் பலத்தை அதிகரித்துக் கொண்டிருப்பதை நாம் மறுப்பதற்கில்லை.

சிங்கப்பூர், இலங்கையிலுள்ள திரிகோணமலை, மற்றும்—ஏடன் ஆகிய மூன்று இடங்களில் தளங்களை அமைத்துக் கொண்டு இந்துப் பெருங்கடலையே தனது சுயார்ஜித சொத்தைப் போல பாதுகாத்து வருகிறது ஆங்கில ஏகாதிபத்தியம்.

அவ்வளவு ஏன்? சீனக்குடாவில் பார்மோசாவுக்குப் பக்கத்தில் தனது கப்பற் படையை நிற்க வைத்து, மா சே துங்கின் முயற்சிகளுக்கெல்லாம் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருக்கவில்லையா அமெரிக்க ஏகாதிபத்யம்?

ஆகவே கடல் அரணும் தகுந்த பாதுகாப்பல்ல என்பதை நாம் மறுப்பதற்கில்லை.

அப்படியானல் மூன்று பக்கமும் கடல் கொண்ட திராவிடத்தின் கதிதான் என்ன? இந்தக் கேள்வி நம் எல்லோருடைய உள்ளங்களிலிருந்தும் ஒரே நேரத்தில் எழுகிறது.

ஆனல் இதற்கு சிறந்த அரசியல் வித்தகர் என்று பெயர் பெற்ற கே. எம். பணிக்கரே பதில் சொல்லியிருக்கிருர்.

(1) உள் நாட்டில் வலிமை மிக்க ஆட்சி யிருந்தால். எந்த அன்னியனும் கடல் மூலம் நாட்டில் புகுந்து விட முடியாது. உதாரணமாக, இந்தியாவில் மொகலாயர் ஆட்சி நல்ல முறையில் இயங்கிய வரையில் ஆங்கிலேயர்களால் இங்கே வாலாட்ட முடியவில்லை. மொகலாயப் பேரரசு படிப்படியாக சரியத்துவங்கிய பிறகுதான் அவர்கள் ஆதிபத்திய உணர்ச்சிக்கு இந்த நாடு பலியாயிற்று.

மேலும் பிரான்சு இங்லாந்து ஆகிய நாடுகளின் வரலாறும் இதே கருத்தைத்தான் வலியுறுத்துகிறது.

ஆங்லேயர்கள் பலமுறை பிரெஞ்சு நாட்டுக் கடற்கரையில் இறங்கி அந்த அரசாங்கத்துக்குத் தொல்லை தந்து, மண் கவர முயன்ருர்கள். நூறு ஆண்டுகள் தொடர்ந்து இந்த முயற்சி நடைபெற்றது. இறுதியில் ஆங்கிலேயர்கள் தோல்வியைத்தான் காண முடிந்தது. காரணம் பிரான்சு நாட்டு அரசாங்கம் பலம் பொருந்தியதாய் காட்சி தந்தது!

(2) அடுத்தது நம்முடைய கடற்படையை அளவிலும் வலிவிலும் பெருக்கிக்கொள்வது.

முப்பெருங் கடல் மூலம் அன்னியப் படை யெழுச்சி நிகழ

✻ தொடர்ச்சி 10-ம் பக்கம்

இணையற்ற நாடகம்
ஒப்பற்ற
நூல் வடிவில்
✻
விலை
ரூபாய் 1—8—0
✻
முத்துவேல் பதிப்பகம்
77, மதுரை ரோடு,
— திருச்சி. —

'ஆறு குதிரை' வண்டி; அத்தனையும் நொண்டி!

★

ஆறு குதிரைகள் பூட்டிய அழகான 'கோச்சு' வண்டி; அதிலேதான் ஆகஸ்ட் 15-ம் தேதி யன்று பவனி வந்தார் இந்தியக் குடியரசின் தலைவர் ராஜேந்திரப்பிரசாத்!

வண்டி அழகானதுதான்; ஆனால் அது உபயோகமற்றது என்பதை நம்மால் சுட்டிக் காட்டாமலிருக்க முடியவில்லை.

கோச்சு வண்டியை அல்ல: அசோக சக்கரத்தைக் கொண்டிருக்கும் இந்த நாட்டின் ஆட்சி வண்டியைத்தான் குறிப்பிடுகிறோம், அப்படி!

சென்னையின் ஆறு அமைச்சர்கள் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் தலைமை சின்னமாம் ராஜேந்திரரது கோச்சு வண்டியை இழுக்கும் குதிரைகளாகப் பயன்படுகிறார்கள்; மற்ற அமைச்சர்களோ வண்டியைப் பின்னாலிருந்து தள்ளும் எடுபிடிகளாக இருக்கிறார்கள்!

முன் வரிசையிலே காமராசர்; சுப்ரமணியம் என்ற இரு குதிரைகள்!

அதில் காமராசக் குதிரையோ தட்சிணப் பிரதேசம் வேண்டாம் என்று முன்னால் இழுக்க, சுப்ரமணியக் குதிரையோ தட்சிணப் பிரதேசம் வேண்டுமென்று பின்னால் இழுக்கும் வேடிக்கையைப் பார்க்கிறோம்!

அடுத்த வரிசையிலோ பக்தவத்சலக் குதிரை! அதுவோ 'பத்து லட்சம்' இருக்கும் பக்கமெல்லாம் கனைத்துக்கொண்டு ஓடப் பார்க்கிறது!

பிறகு ராமசாமிப் படையாச்சிக் குதிரை! இதை நம்ப முடியாது. கொள் இருக்கிற பக்கமெல்லாம் கோச்சு வண்டியையே இழுத்துக் கொண்டு ஓடிவிடும்!

அதற்குப் பின்னால் மாணிக்கவேலர் குதிரை, இதுவும் அப்படித்தான்! சென்ற தேர்தலிலே எந்த 'சைக்கிளி'ன் உதவியால் இது—

சட்டசபை நுழைந்ததோ இன்று அதே சைக்கிளையே சுக்கு நூறாக உடைத்துவிட்டு கதர்க் குல்லாய்க்காரனிடம் லகானை மாட்ட வாயைத் திறந்து விட்டது!

இன்னொரு குதிரை ராமநாதபுரம் ராஜா! அதுவோ பந்தயக்குதிரை; ஆட்சி பீடத்தையும் கிண்டியாக நினைத்தே வலம் வருகிறது!

—இது போன்ற குதிரைகளை நம்பித்தான் தேசியத்தார்களின் 'கோச்' புறப்பட்டிருக்கிறது.

முற்றிலும் முரண்பட்ட இக்குதிரைகளை வைத்துக்கொண்டு இன்னும் எத்தனை நாளைக்குத்தான் வண்டியைச் செலுத்தப் போகிறார்கள்? வருங்காலம் பதில் சொல்லத்தானே போகிறது!

❊

சென்னை (வண்ணையம்பதி)

19-8-56 ஞாயிறு காலை 9-30 மணிக்கு, வண்ணையம்பதி தியாகராயா கல்லூரி நுண்கலை மன்றத்தின் சார்பில் நடைபெறும் சிறப்புச் சொற்பொழிவு நிகழ்ச்சியில், பேராசிரியர் ம. கி. சண்முகம் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையில், தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் பேசுவார்.

[கட்டணம்: ரூ. 1. அணா 8.]

ஈரோடு

19-8-56 ஞாயிறு மாலை 7 மணிக்கு ஈரோடு கோட்டை தெப்பக்குள மைதானத்தில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பேசுவார்கள். அன்று மாலை 5 மணிக்கு அன்னாருக்கு ஈரோடு நகர சபையில் வரவேற்பு அளிக்கப்படும்.

...ோத்தனூர்

20-8-56 மாலை 6 மணிக்கு, திரு. வி. க. திடலில், தோழர் வி. காளியப்பன் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன், வி. சிவப்பிரகாசம் பி. ஏ., பி. எல்., மற்றும் பலர் பேசுவர்.

சென்னை (அயன்புரம்)

20-8-56 திங்கள் மாலை 6 மணிக்கு, மார்க்கெட் மைதானத்தில், தோழர் கே. வீராசாமி அவர்கள் தலைமையில், தோழர் ஈ. வெ. கி. சம்பத், வி. எஸ். கோவிந்தராசு—ஆகியோர் பேசுவர்.

சென்னை (சேத்துபட்டு)

25-8-56 சனி மாலை 6 மணிக்கு, டி. பி. மருத்துவமனைக்குப் பின்புரம், தோழர் வா. சங்கரநாராயணன் அவர்கள் தலைமையில், அறிஞர் அண்ணா, துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன்—ஆகியோர் பேசுவர்.

உதகை

26-8-56 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு, போஸ் மைதானத்தில் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் பேசுவர்

6-ம் ஆண்டு துவக்கவிழா

26-8-56 ஞாயிறு மாலை 6 மணிக்கு, அண்ணாபிள்ளை தெரு (கொத்தவால் சாவடியருகில்) தோழர் ரெ. பாரி அவர்கள் தலைமையில் தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஏ. கே. வில்வம், கோ. செங்குட்டுவன் ஆகியோர் பேசுவர்.

பூகம்பம் அது....

❊ 2-ம் பக்கத் தொடர்ச்சி

நைந்து கொண்டு இருக்கிறதே!

இந்த அழகில் — ஐந்தாண்டு திட்டம் தென்னகத்தை சொர்ண பூமியாக்கிவிட்டதாக துணிந்து பேசுகிறார்—இங்கே அவரால் பேசமுடிகிறது!

ஆக. 8—வர்தகர்கள் கூட்டத்தில் பேசிய நிதியமைச்சர்; 'ஐந்து ஆண்டு திட்டத்தில் சென்னைக்கு ஒதுக்கிய பணம் மிகக் குறைவு" என்று கூறியிருக்கிறார்; கூறுவது நாமல்ல —தேசியத் தழும்பால் உடம்பெல்லாம் மரத்துப் போயிருக்கும் 'கனம்' தேபர்ஜி இதற்கென்ன பதிலிருப்பாரோ அறியோம்!

தேர்தல் நெருங்க நெருங்க ஆளவந்தார்கள் எதையாவது பேசி; முரண்பட்ட வாதங்களைக் கொட்டி மக்களை ஏமாற்ற நினைக்கிறார்கள் என்பதுதான் தெளிவாகிறதே தவிர —பிரச்சனைகளுக்கு பரிகாரம் தேட முன் வருவதாகத் தெரியவில்லை!

எந்தெந்த காரணங்களால் நாம் பிரிவினை கோருகிறோம் என்பதைப் புரிந்து கொண்டும் —பிரிவினை கோரும் நம் சக்தி எந்தெந்த காரணங்களால் வலுவடைந்து வருகிறது; வரப்போகும் தேர்தலில் பலம் வாய்ந்த எதிர் சக்தியாக களத்திலே காங்கிரசை சந்திக்கயிருக்கிறது என்பதை யெல்லாம் புரிந்து கொண்டதால்; காங்கிரஸ் மேலிடத்திலே ஏற்பட்டிருக்கும் அதிர்ச்சியின் விளைவுதான்; தேபர் போன்றவர்களின் ஜீவன் இழந்தவாதங்கள் என்பதை தென்னகம் உணர்ந்து விட்டது!

❊

பிரிவினை கீதம், பித்தலாட்டங்களால் மாய்ந்து போவதல்ல!

விடுதலைதாகம் — காங்கிரஸ்காரர்களின் 'கானல் நீர்' சமாதானங்களால் தணிந்து போவதல்ல!

சுதந்திர உணர்ச்சி: நெய் பெய்து ஆரியன் மூட்டுகிற ஓமகுண்டமல்ல—அது லட்சியவாதிகள் ரத்தம் சிந்தி எழுப்புகின்ற தீக் குண்டம்!

எத்து பேசித்திரியும் ஏதேச்சாதிகாரிகள் இதை உணர வேண்டும்!

குமுறுகின்ற சக்தி அவிழ்த்து விடும் அடக்குமுறைகளால் அழித்துவிட முடியாத ஒரு ஆபத்து!

சுதந்திரக் கொந்தளிப்பு— ஒரு பயங்கர எரிமலை!

ரதகஜ துரகபதாதிகளையும் தவிடு பொடியாக்கி விடும் பூகம்பம்!

தேசிய பூபாளம் பாடித்திரியும் ஏகாதிபத்தியப் பித்தர்கள் —இதைமனப் படமாக்கிக் கொள்வது அரசியல் விவேகம் என்பதை நினைவிற்கு கொண்டு வருகிறோம்.

ஏன் வேண்டும்...

❊ 9-ம் பக்கத் தொடர்ச்சி

மென்ற ஐயப்பாடு எழுந்தால் கப்பற்படையைப் பெருக்கிக் கொள்வதற்குச் சுதந்தர திராவிடம் சிறிதும் தயங்கப் போவதில்லை.

ஆனால்; பெரும் பெரும் ஏகாதிபத்தியங்களுக்கு எதிராக எப்படி நீங்கள் கப்பற்படையைப் பெருக்கி சமாளிக்க முடியுமென்று கேட்கலாம்!

இதற்கும் பதிலிருக்கிறது. சின்னஞ் சிறிய ஜப்பான் முப்பதே ஆண்டுகளில் தனது கப்பற்படையைப் பெருக்கி உலக வல்லரசுகளையே ஆட்டிப் படைக்கவில்லையா? அதைப் போன்ற சக்தி திராவிடத்திற்கு இல்லை என்று யார் கூற முடியும்?

முடிவாக ஒன்று; கடல் இருப்பதால், பாதுகாப்பு இல்லை; எனவே திராவிடம் பிரிந்தால் அன்னியர் புகுந்து விடுவர்—என்ற கற்பனைக் கேள்விக்கு இவ்வளவு பெரிய பதிலே தேவையில்லை.

இன்னொரு சிறிய பதிலும் இருக்கிறது.

எல்லையில் அன்னியர் எளிதில் புக முடிகிற கடல் இருக்கிறது என்ற காரணத்திற்காக எந்த நாடு சுதந்தரம் விரும்பாமல் இருக்கிறது?

பல்லாயிரக் கணக்கான அடிகள் உயரத்தில் பறக்கும் விமானங்களும், அவைகளுக்கு ஒலியின் வேகத்தையும் முந்தக் கூடிய அளவுக்கு வேகமாகப் பறக்கும் தன்மையையும், கொடுத்திருக்கும் இந்த விஞ்ஞான காலத்தில் இயற்கை அரண்களைப் பற்றிப் பேசுவது கடைந்தெடுத்த அறியாமையல்லவா?

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கை தனித்து இயங்கவில்லையா?

சுற்றிலும் கடலால் சூழப்பட்ட பிரிட்டன் மாபெரும் சாம்ராஜ்யத்தையே கட்டியாளவில்லையா?

ஜப்பான் தான் என்ன; அதுவும் ஒரு தீவுதானே?

இந்தோனேஷியாவும் அப்படித்தானே; பல தீவுகளைக் கொண்டதுதானே அந்த நாடு!

நான்கு பக்கமும் கடல் சூழ்ந்த அந்த நாடுகள் யாவும் தனித்து வாழும்போது மூன்று பக்கங்கள் மட்டுமே கடலால் சூழப்பட்ட நாம் ஏன் தனித்து வாழக்கூடாது?

—இதையேதான் திருப்பித் திருப்பிக் கேட்கிறோம்; அழுத்தந் திருத்தமாகக் கேட்கிறோம்; கேளாக் காதினரின் கர்ண பேரிகை கிழியும் படியாகத் தெளிவுபடக் கேட்கிறோம்— பதில் சொல்லட்டும்!

—மாறன், எம். ஏ.

ராப்ராய் தி. மு. க. தோழர் பி. ஜி. துரையரசன் அவர்களின் துணைவியார் 1-7-56 அன்று ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானார்கள் என்ற சேதி அறிந்து மகிழ்கிறோம்.

ஆட்டக் குதிரை

வர்ண விளக்குகள்—வண்ணக் காட்சிகள் — இப்படி நீண்ட தூரம் வளர்ந்திருந்த அந்தக் கடைத் தெருவில் நடந்து கொண்டிருந்தார் கதிரேசன். எதையோ ஆர்வமுடன் தேடிக் கொண்டு அலைந்த அவரது கண்களில், சற்றைக் கொருதரம் பயமும், படபடப்பும் தோன்றித் தோன்றி மறைந்தது. அவரது துடிப்புக்குக் காரணம்தான் என்ன?

'குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாமான்கள் இங்கு கிடைக்கும்' என்ற கொட்டை எழுத்துக்களைக் கண்டதும் கதிரேசன் 'குபீர்' என்று உள்ளே நுழைந்தார். 'உங்களைத்தான் தேடிக்கொண்டிருந்தேன், வருக! வருக!' என்று வரவேற்பதைப்போல வாசலில் நின்று கொண்டிருந்தது ஒரு பொம்மைக் குதிரை! கதிரேசனின் முகத்தில் புன்னகை தோன்றியது.

சிரிக்கத்தானே செய்வார்! இன்று அவர் செய்யப்போகும் செயல் சாதாரணமானதா, என்ன?......

"அப்பா! அப்பா! அடுத்த வீட்டு ஆனந்தனுக்கு மட்டும் அவன் அப்பா வாங்கித் தந்திருக்கிறாரே! அவருக்கு மட்டும் கொம்பா முளைச்சிருக்கு...?" என்று கொம்பில்லாத குதிரைக்கு அவரது அன்புச் செல்வன் எத்தனை வம்பு பேசியிருக்கிறான். வம்பு மட்டுமா? அழுதிருக்கிறான்; அடம் பிடித்திருக்கிறான்; அத்தனையும் பலிக்காமல் போகவே, 'உண்ணாவிரதம்' இருந்தும் கண்டனம் தெரிவித்திருக்கிறான்.

சிரித்து மகிழ வேண்டிய வயது அவனுக்கு; அதைக் கண்டு களித்திருக்க வேண்டும் என்ற ஆசை அவருக்கு! இருந்தாலும் இடையிலே நின்று 'நடக்காது அது!' என்று சித்திரவதை செய்கிறதே பொல்லாத வறுமை!

தந்தை என்ன செய்வார்? தன் அன்பு மகனின் கண்களில் நெளிந்தோடிய ஏக்கத்தைக் கட்டு—தனி இடத்திலே நின்று அவன் எழுப்பிய விம்மல் ஒலியைக் கேட்டு — தவித்தார். உலகமறியா அந்தப் பிஞ்சு நெஞ்சுக்கு, தன் அப்பா சக்தியற்றவர் என்ற ஒரே உண்மையை எப்படி உணர்த்த முடியும்? முடியாது; முடியவே முடியாது! 'வழியில்லை கண்ணே!' என்று சொன்னால், 'ஐயோ! அப்பாவின் நெஞ்சத்தில் அன்பே இல்லையே!' என்றுதான் முடிவு கட்டும் அந்த சூதறியா உள்ளம்!

கதிரேசன் கலங்கினார். இரவு பகலென்று பாராது கணக்கெழுதும் அவருக்கு, அவரது முதலாளி தரும் ஊதியமோ, மூவரே அடங்கிய அவரது குடும்பத்திற்குப் போதாத நிலை! மகன் விளையாட்டுக் குதிரை கேட்கிறான்; பணம் வேண்டும்—என்று கெஞ்சினார்; இரங்கவில்லை முதலாளியின் மனம்! "என்னய்யா இது வேடிக்கை! யோக்கிதைக்கு மீறி ஆசைப்படலாமா? வகையில்லாத ஜென்மங்களுக்கு பிள்ளை எதுக்கு? அந்தப் பிள்ளைங்களுக்கு ஆசைதான் எதுக்கு?"–'சுரீர்' என்று ஆயிரம் ஊசிகள் நெஞ்சில் தைப்பது போலிருந்தது கதிரேசனுக்கு!......

கடையிலே கூட்டம் அதிகமாக இருந்தது. அதற்குமேல் கதிரேசன் எதுவும் யோசிக்கவில்லை. நேராகக் கடைக்காரனிடம் சென்றார். "அந்த விளையாட்டுக் குதிரை என்ன விலை?" என்று கேட்டார்.

"பத்தே ரூபாய்தான்!... 'ஹை கிளாஸ் டீக் உட்' சார்! உடையாது; கொள்ளாது! ...வர்ணமும் போகாது!..." –கடைக்காரன் வழக்கம்போல் பேசினான்.

கதிரேசன் எதுவும் யோசிக்கவில்லை; 'டக்'கென்று மடியிலிருந்து பத்து ரூபாய் நோட்டை எடுத்தார். ஆனால், அப்போது அவரது கரங்கள் ஏனோ நடுங்கின. அந்த நடுக்கத்தைக் கடைக்காரன் கவனிக்கவில்லை. அவனுக்கு ஒரே வியப்பு–பேரம்கூட பேசாமல் சொன்னவுடனேயே பத்து ரூபாயைத் தருகிறாரே என்று! 'அடடா! இது தெரிந்திருந்தால் இன்னும் ஐந்து ரூபாய் அதிகம் சொல்லியிருக்கலாமே' — என்றும் வருந்தினான்.

குழம்பிப்போன நெஞ்சுடன், கையில் குதிரையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டார் கதிரேசன். கடை வாசலில் அடியெடுத்து வைத்தவுடன் திடுக்கிட்டுவிட்டார். எதிரே அவரை நோக்கி வந்து கொண்டிருந்த பயங்கரப் பொருள்தான் என்ன? கதிரேசனின் உடல் குப்பென்று வியர்த்தது. நடுக்கடலிலே சிக்கிவிட்ட நீந்தத் தெரியாதவன் மூச்சுத் திணறித் தவிப்பானே, அதைப் போலத் தடுமாறினார்.

எதிரே அவரது முதலாளி வந்து கொண்டிருந்தார். கதிரேசனையும் பார்த்து விட்டார். பார்த்தபின் பேசாது செல்வானேன்? அவரது முகத்தில் படர்ந்திருக்கும் வழக்கமான கடுகடுப்பு இப்போது புதிய புதிய அர்த்தங்களைக் கற்பித்தது கதிரேசனுக்கு!

"நம்பினவனுக்கு துரோகம் செய்துவிட்டாயே கதிரேசா!... நாளைக் காலையில் கடைக்கு வா; உனக்காகக் காத்திருக்கும் போலீஸ்!...போலீஸ்!!..."— முதலாளியின் உதடுகள் ஏதோ அசைந்தனவே, அவை இப்படித்தான் சொல்லிற்றா? கதிரேசன் தடுமாறிக் கொண்டே நடக்க ஆரம்பித்தார்.

அதோ, அவரது வீடும் நெருங்கி விட்டது. அவரது அன்பு மகனும் அவரைப் பார்த்துவிட்டான். மறு கணம், "ஆ! அப்பா!" என்று மகிழ்ச்சியால் கத்திக் கொண்டே பாய்ந்தான்.

வீடு செல்லும்வரை—குதிரையில் ஏறி சவாரி செய்யும்வரை–அவன் வாய் ஓயவில்லை. அப்பாவுக்கு அவன் குவித்த வரவேற்புரைகளையும் — வாழ்த்துரைகளையும் — புகழுரைகளையும்— அவர் காதில் வாங்கவேயில்லை. அவரது மனம் ஒரு பயங்கர உலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்தது. அங்கே நம்பிக்கை துரோகிகளை—நாசக் கருத்துடையோரை— கொள்ளைக்காரர்களை—கொலை வெறியர்களை—அடுத்துக் கெடுக்கும் அக்கிரம மதி படைத்தோரை–அழித்தொழிக்க வேண்டிய இத்தகைய விஷப் பூச்சிகளை சந்தித்தார். அந்தப் பயங்கரப் பட்டியலில் அவரும் ஒருவரா?

"இதென்ன அக்கிரமம்! உங்கள் மூளை இப்படியா போகணும்? மானம் போகுது; மரியாதை கெட்டுப் போச்சு! இப்போது விளையாட்டுக் குதிரைதான் முக்கியமா?"–அவரது மனைவிதான் இப்படிக் கேட்டாள். கதிரேசன் பேசாமல் நின்றார்.

"மூணு மாச வாடகை பாக்கி நாளைக்குத் தரலேன்னா சாமான்களைத் தூக்கி வெளியே எறிஞ்சிடுவேங்கிறான் வீட்டுக்காரன். இப்போ குதிரை இல்லாமதான் கெட்டுப் போச்சா ...?—கதிரேசன் வாயைத் திறக்கவில்லை.

"சாப்பாட்டுக்கு வழியில்லை! அடுப்பிலே பூனை தூங்குது! ஊர் சிரிக்குது, நம்ப உதவாக்கரை வாழ்வைப் பாத்து... மானத்தைக் காப்பாத்திக்க வழியில்லே!...குதிரை வாங்க மட்டும் ஏது பணம்?..."

"சீ! வாயை மூடு!...நான் திருடினேன்; நீ யார் கேட்க? ..."—கதிரேசன்தான் அலறினார். அவர் உதடுகள் துடிதுடித்தன. உடல் படபடத்தது. வியர்வை ஆறாய் பெருகிற்று. கண்கள் சிவப்பேறின. ஆத்திரத்தால் மனம் பதறியது. எதுவும் செய்ய முடியாத அவர் "ஐயோ!" என்று வாய்விட்டு அலறினார். வீட்டை விட்டு வெளியே ஓடினார். இவை ஒன்றையும் கவனியாத அவரது மழலைச் செல்வம் குதிரையில் சவாரி செய்து கொண்டிருந்தான்.

❋

"நம்பினவனுக்கு துரோகம் செய்து விட்டாயே கதிரேசா! நாளைக் காலையில் கடைக்கு வா; உனக்காகக் காத்திருக்கும் போலீஸ்! போலீஸ்!" —முதலாளியின் கரகரத்த குரல் இப்படி கர்ஜிப்பதைப் போல் எண்ணி, நடுங்கிக் கொண்டே கடையில் அடியெடுத்து வைத்தார் கதிரேசன். அவரது இடத்தில்—கணக்கு மேஜையின் அருகில் வேறு யாரோ ஒரு நபர் உட்கார்ந்து வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தார். கதிரேசனின் தலை 'கிர்' ரென்று சுழன்றது.

"கணக்குப் பிள்ளைசார்! நீங்க வந்ததும் உங்களை மேலே வரச் சொன்னார் முதலாளி!" என்று கடைப் பையன் சொன்னான்.

மேலே முதலாளி இருப்பார்; போலீசும் இருக்கும் — என்று எண்ணியபடி கனவில் நடப்பதைப்போல நடந்து சென்றார்.

அங்கே யாரும் இல்லை! வெறிச்சென்றுகிடந்தது அறை! ஆனால் முதலாளியின் மேஜையின் மேல் ஒரு வெள்ளைக் காகிதம் கிடந்தது! நடுங்கும் கைகளுடன் அதை எடுத்தார்; நெஞ்சு துடிக்க–படபடக்க—படித்தார்.

"தடுமாறாதே, கதிரேசா! எனக்கும் மகனுண்டு; பெற்ற பாசம் உண்டு! உன்னை இதுநாள்வரை சித்ரவதை செய்து கொண்டிருந்தேன். நேற்று உன்னைத் தொடர்ந்து வந்தேன். உன் இல்லத்திலே எழுந்த இடியோசையை—இதயக் குமுறலை கேட்டேன்! கணக்கிலே நேற்று பத்து ரூபாய் குறைந்தது; அது என்னுடைய மனிதத் தன்மையின் குறைவைத்தான் காட்டியது. மன்னித்துவிடு என்னை. இன்று முதல் உன் வேலை உயருகிறது; ஊதியமும் உயருகிறது.

—உன் முதலாளி"

கதிரேசனின் கையிலிருந்த கடிதம், வலையில் சிக்கிய புறா போல் காற்றில் துடித்தது!

—சொர்ணம்.

கு. ரா. பரமசிவன்; காரமடை.

(?) என்னுடைய உ‌றவியில்லாமல் பட்டதாரிகளான ஒருவர் கூட தி. மு. க.வில் இல்லை—என்று பெரியார் சொல்லுவது உண்மையா?

ஒரு சமயம் குருசாமி பி. ஏ., ஜனார்த்தனம் எம். ஏ., ஆகியோரைத்தான் அப்படி கேலி செய்திருக்கிறாரோ, என்னவோ!

சி. பழனிச்சாமி; நேரூர்.

(?) காமராசருக்கும். தஞ்சாவூர்ப் பொம்மைக்கும் வித்யாசம் உண்டா?

உண்டு; தஞ்சாவூர் பொம்மை தென்னாட்டில் தயாரிக்கப் பட்டது. ஆனால் சாமராசரின் ஒவ்வொரு அணுவும்கூட வடநாட்டு 'டிரேட் மார்ச்'கைக் குத்திக் கொண்டிருப்பது!

எஸ். பழனிச்சாமி; காரைப்பூர்.

(?) ஓய் எழுத்தாணியாரே; நீர் எந்தப் பேனாவினால் எழுதுகிறீர்?

இன உணர்ச்சிப் பேனாவினால் உரிமை மசியைத் தொட்டு எழுதுகிறேன்!

(?) வரப்போகும் பொதுத் தேர்தலில் தி. மு. க.விற்கு எத்தனை சீட்டுகள் கிடைக்கும்?

எத்தனை கிடைத்தாலும் அத்தனையும் நமக்கு துருப்பு சீட்டுகள் தான்!

ஆர். சீனுவாசன்; சுக்கம்பட்டி,

(?) காமராசர் ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்?

அவர்தான் உடல் பொருள் ஆவி அனைத்தையும் வடநாட்டு எஜமானருக்குச் சாசனம் எழுதி வைத்துவிட்டாரே! அதனால் தான்!

மு. கலைமன்னன்; முடிசு.

(?) அரசியலுக்கும், சூதாட்டத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

மந்திரி ராமநாதபுரம் ராஜாவைப் பொறுத்தவரையில் இரண்டிற்கும் அதிக வேறுபாடு கிடையாது!

(?) தி. மு. க. பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றால் முதலில் எது ஒழிக்கப்படும்?

'இவர்களால் வெற்றிபெற முடியுமா?' - என்ற ஆணவம் முதலில், தானாகவே ஒழிக்கப் படும்!

கே. இளமணி; வேலூர்.

(?) பெண்கள் நகங்களுக்குச் சாயம் பூசிக்கொள்கிறார்களே; ஏன்?

நமது தேசீய வீரர்கள் 'அசங்'களுக்கே சாயம் பூசிக்கொள் கிறார்கள்; நீர் இதைச் சொல்ல வந்து விட்டீரே!

ந. கண்ணாயிரம்; முத்துப்பேட்டை

(?) அயோத்தியை ஆண்டு வந்த ராமனுக்கு கடவுள் பட்டம் கிடைத்தால் தமிழ் நாட்டை ஆண்டு வரும் காமராசருக்கு என்ன பட்டம் கிடைக்கும்?

வஞ்சக விபீஷணன் பட்டம்!

வி. எஸ். கணேசன்; அரவக்குறிச்சி

(?) உதய சூரியனுக்குக் கிரகணம் ஒன்று உண்டே தெரிகிறதா?

முடிவில் வெற்றி பெறுவது எது? — அது தெரிகிறதா உமக்கு?

எச்சரிக்கை

பொள்ளாச்சி வட்டம் நெகமம் என்ற கிராமத்தில் பொது நல நாடக மன்றம் என்ற பெயரில் சிலர், நான் எழுதியதாக "உடைந்த வீணை" என்ற ஒரு போலி நாடக விளம்பரம் செய்து, அடுத்து "மணி மகுடம்" எதிர்பாருங்கள் எனவும் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். இவைகளுக்கு என் அனுமதியும் பெறவில்லை. "உடைந்த வீணை" நான் எழுதியதுமல்ல என்பதோடு. அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கிறேன்.

மு. கருணாநிதி.

சென்னை நகர மாணவர்களுக்கு!

தி. மு. க. மாணவர் கிளை கூட்டம் ஒன்று சென்னை இராயபுரம், 'அறிவகத்தில்' 21—8—56 வெள்ளிக்கிழமை காலை 10 மணி யளவில் நடைபெறும். அதுபோது 5—8—56 அன்று நடைபெற்ற 'தேர்தல் நிதி அளிப்பு விழா' கூட்ட வரவு-செலவு கணக்கு, மற்றும் இதர பிரச்சினைகள் பரிசீலிக்கப்படும். எல்லோரையும் இதனையே அழைப்பாகக் கொண்டு பங்கு கொள்ள பணிவுடன் அழைக்கிறேன்.

அமைப்பாளன், தி. மு. க. மாணவர்கிளை.

அன்பன், டி. கே. பொன்னுவேலு.

பரிதாபத்திற்குரியவர்கள்!

"இந்தியாவில் எவ்வளவோ மதங்களிருக்கின்றன; மொழிகள் இருக்கின்றன. இதைக் காட்டித்தான் பிரிட்டீஷ்காரர் நம்மை ஆண்டு கொண்டிருந்தார்கள். ... இம்மாதிரியான வித்தியாசங்கள் இருந்த போதிலும் இந்திய மக்களிடையே அடிப்படையான ஒரு ஐக்கியம் இருக்கிறதென்று பிரிட்டீஷாரை ஏமாற்றி, திலகரும், காந்தியும் அவர்களை வெளியேறச் செய்துவிட்டார்கள்."

இந்த உபகண்டத்தில் எவ்வளவோ வித்தியாசங்கள் இருக்கின்றன! அவைகளை வைத்துத்தான் வெள்ளைக்காரன் சுரண்டினான்! ஆனால் இந்தியாவுக்குள்ளே ஒரு அடிப்படை ஐக்கியம் இருக்கிறதென்று கூறி திலகரும் காந்தியும்தான் வெள்ளைக்காரனை ஏமாற்றி விட்டார்கள்!

மணியான வாசகங்கள்! உண்மையின் பிரதிபலிப்பு!

—யார் கூறியது இப்படி? தி. மு. க. வைச் சேர்ந்தவருமல்ல; அதன் ஆதரவாளருமல்ல—

'சாட்சாத்' ஆச்சாரியாரே கக்கியிருக்கிறார் சென்னை சுதந்திர நாள் கூட்டத்தில், இந்த உண்மைகளை!

இந்திய உபகண்டத்திலே இயற்கையில் ஒரு ஐக்கியம் அமைந்து கிடக்கவில்லை! அப்படி ஒரு போலி ஐக்கியத்தை உண்டுபண்ண நினைப்பதும் பேதமை!

—ஆச்சாரியாரின் பேச்சு மேலும் இந்த உண்மைகளையெல்லாம் ஒப்புக் கொண்டதாக அமைந்திருக்கிறது!

பரிதாபத்திற்குரியவர்கள்! தாமதமாகவாவது உணர்கிறார்களே! அந்த அளவுக்கு மகிழ்ச்சிதான் நமக்கு!

தேவைதானா?

ஆகஸ்ட் 14-ம் தேதி; மாலை நேரம்!

ராஜேந்திர பிரசாத் கிண்டி மாளிகையிலிருந்து மவுண்ட்ரோடு வழியாகச் செல்வதால் அதற்குப் பலமணி நேரம் முன்னதாகவே சாலையின் இரு மருங்கிலும் சாரை சாரையாக போலீசார் குவிந்து கிடந்தனர்!

அது மட்டுமா? ராஜேந்திரர் வருவதற்குப் பல மணி நேரம் முன்பாகவே போக்கு—வரத்து யாவும் நிறுத்தப் பட்டது! சாலையைக் குறுக்கே கடப்பவர்கள் அனுமதிக்கப் படவில்லை! குடியரசுத் தலைவரை வேடிக்கை பார்ப்பதற்கு கட்டாயமான வழிகளில் பொது மக்களைத் திரட்டுவதைப் போலிருந்தது, இந்த நடவடிக்கை! இதில் ஒரு அக்ரமம் என்ன தெரியுமா?

டாக்டர் ஒருவர் நமது அலுவலகத்திற்குப் பக்கத்திலிருக்கும் தெருவின் வழியாக மவுண்ட் ரோட்டிற்குள் நுழைவதற்கு தனது காரைத் திருப்பினார்.

ஆனால் போலீஸ்காரர்களோ அவரை அனுமதிக்கவில்லை.

உடன் அந்த டாக்டர் காரைவிட்டுக் கீழே இறங்கி, போலீஸ் 'சார்ஜண்டை' நோக்கி, 'அய்யா! எனது 'பேஷண்ட்' செத்துக்கொண்டிருக்கிறார். நான் உடனே செல்லவேண்டும். எனக்கு மட்டுமாவது போவதற்கு சலுகை தாருங்கள்!'—என்று கூவினார்.

ஆனால் போலீஸ் அதிகாரிகளோ டாக்டரைப் போவதற்கு அனுமதிக்கவில்லை.

பாவம்; அந்த அதிகாரிகள்தான் என்ன செய்வார்கள்? மேலிடத்து உத்தரவு அப்படி!

இறுதியில் ராஜேந்திரரது பவனி போன பிறகுதான் அந்த டாக்டர் போக முடிந்தது.

நமக்குத் தெரிந்தது இப்படி! நமக்குத் தெரியாமல் சென்னையில் இதுபோல் எத்தனை நிகழ்ச்சிகள் நடந்தனவோ தெரியவில்லை!

எத்தனை நோயாளிகள் தங்களைக் கவனிப்பதற்கு தகுந்த நேரத்தில் டாக்டர்கள் வராத காரணத்தால் அபாயக் கட்டத்தை அடைந்தார்களோ; தெரியவில்லை!

ராஜேந்திரர் வரட்டும்; அவருக்குப் போலீஸ் பாதுகாப்பு அளிக்கட்டும்!—கவலையில்லை நமக்கு!

ஆனால் அவர் வருவதற்குப் பலமணி நேரம் முன்னதாகவே போக்குவரத்து நிறுத்தப்பட வேண்டுமா?

கவர்னர் செல்வதற்குச் செய்வதைப் போல் கார்களையும், வண்டிகளையும் ஓரத்திற்குப் போகச் செய்தால் மட்டும் போதாதா?

ஏனைய சுதந்தர நாடுகள் ஒவ்வொன்றிலும் இப்படித் தான் பல மணி நேரத்துக்கு பொது மக்கள் துன்புறுத்தப் படுகிறார்களா?

—ஆட்சியாளர்கள் இதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்காவிட்டால் விரைவில் பாதிக்கப்படுவோர்கள் தொகை பெருகிக்கொண்டே போகும் என்பதைத்தான் நாம் எச்சரிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம்!

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட் ரோடு சென்னை-6.